# செம்பதாகை

மலர்: 4
1982 ஐப்பசி
இதழ்: 10
விலை ரூபா: 1-00
புரட்சிகர வெகுஜன ஏடு


# பொது எதிரியை தோற்கடிக்க மக்களே தயாராகுங்கள்!

**நமது நாட்டின் பொது எதிரியான யூ.என்.பி. யைத் தோற்கடிப்பதற்கு இலங்கையின் சகல தரப்பைச் சேர்ந்த மக்களும் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். இவ்வாறு வாக்களிப்பது நமது நாட்டு மக்களின் முன்னுள்ள உடனடிக் கடமையாகும்.**

கடந்த ஐந்து வருட ஆட்சியில் யூ. என. பி. தனது பாசிச சர்வாதிகாரத்திற்கான சகல தோற்றங்களையும் வெளிக்காட்டி விட்டது. தாராள இறக்குமதிக்கொள்கை, சுதந்திர வர்த்தகவலயம் அரச — கூட்டுத்தாபன நிறுவனங்கள் தனியாரிடம் கையளித்தல், முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளின் நிபந்தனையுடன் கூடிய கடன்கள் போன்றன தேசிய பொருளாதாரம் என்றஅடிச்சுவட்டையே நாசம் செய்து விட்டது.

அந்நிய — உள்ளூர் பெருமுதலாளிகளின் வேட்டைக்காடாக நமதுநாடு மாற்றப்பட்டுள்ளது. ஆடம்பரப் பொருட்களின் குவிப்பினாலும், அந்நிய நாடுகளுக்கு வேலை பெற்றுச் செல்வதாலும் வெளித் தோற்றத்திற்கு பகட்டுத்தனம் காட்டும் ஒரு போலித் தோற்றம் காண்பிக்கப்படுகிறது. அதேவேளை நாட்டுமக்களின் வாழ்க்கை நிலைமைகள் நாசமடைந்துள்ளதை மக்கள் உணருகின்றனர்.

இந்த அரசு பொருளாதார நெருக்கடிகளையும், மக்களின் அதிருப்திகளையும் எதிர்கொள்ள முடியாத நிலையில் அரசியல் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிடுவதற்கான சட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்துள்ளது. அரசியல் சாசன மாற்றம்— திருத்தங்கள், வேலைநிறுத்தம் செய்யும் உரிமையை பறித்தல், குடியுரிமைகள் பறித்தல், பயங்கரவாத தடைச் சட்டத்தை பிரயோகித்தல் போன்றவற்றின்மூலம் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத இனவிரோத நடவடிக்கைகளை யூ. என். பி. அரசு மேலும் எடுத்து வந்துளது. இதனால் இலங்கை மக்கள் அனைவரினதும் பொது எதிரியாகத் தன்னை அடையாளம் காட்டியுள்ளது. இப்பொது எதிரியை அதிகாரபீடத்தில் இருந்து அகற்றுவதற்கு இன்றைய சந்தர்ப்பத்தில் மக்கள் தவறுவார்களேயானல் நமது நாடு தென்கொரியா, சிங்கப்பூர், இந்தோனிசியா பிலிப்பைன்ஸ் போன்ற தனிக் கட்சி-தனிநபர் பாசிச சர்வாதிகார நாடுகள்போல் மாற்றப்பட்டுவிடும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. இத்தகைய அபாயத்தை உணர்வதாலேயே யூ. என், பி.யை அதிகாரத்திலிருந்து அகற்ற மக்கள் பிரதான எதிர்க்கட்சிக்கு வாக்களிப்பது அவசியத் தேவை என நாம் வற்புறுத்துகின்றோம்.

நாடு யூ.என்.பி. மூலம் எதிர்நோக்குயுள்ள உண்மையான ஆபத்தை உணராதவர்களும், யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியாத சிலரும் பகிஸ்கரிப்பு என்ற கோஷத்தை முன்வைக்கின்றனர்.

வெறும் சூத்திரங்களை மந்திரம் போல் உச்சரித்துக் கொண்டு உண்மை நிலைமைகளைக் காணத்தவறும்வரட்டு வேதாந்திகளான இவர்கள் கண்களைக் கட்டிக் கொண்டு குருவிபிடிக்க முனைகிறார்கள். இவர்களது குழந்தைத் தனமான பகிஷ்கரிப்பு கோஷம் அடிப்படையில் பொது எதிரியான யூ. என். பி. க்கே உதவக்கூடியது என்பது சகலருக்கும் விளங்கக் கூடியதே.

பொது எதிரியான யூ. என்.பி.க்கு எதிராக சகல பிரிவு மக்களின் தேவைகளையும் உள்ளடக்கக் கூடிய பொதுவேலைத் திட்டத்தை முன்வைத்து, பொதுஅபேட்சகரை நிறுத்தி, யூ. என். பி.யைத் தோற்கடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என எமது கட்சி ஏற்கனவே வற்புறுத்தி வந்துள்ளது. அது சாத்தியப்படவில்லை. இதையிட்டு நாம் எமது கவலையைத் தெரிவிப்பதுடன் இறுதி நேரத்திலாவது எதிரணிக்கட்சிகள் பிரதான வேட்பாளருக்கு விட்டுக் கொடுத்து அவரை வெற்றிபெறச் செய்வதற்கு முன்வரல் வேண்டும் என்பதே மக்களினதும், எமது கட்சியினதும் விருப்பமாகும். இன்றைய நிலையில் யூ.என்.பி. யை தோற்கடிக்கக்கூடிய வல்லமை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கே உண்டு என்ற உண்மையை நாம் சொல்வதுடன் அவ்வேட்பாளரையே நாம் ஆதரிக்கவும் வேண்டும். யூ.என்.பி. ஆட்சியின் பல்வேறு கொடுமைகளுக்கு ஆட்படுத்தப்பட்ட சகல மக்களும் நிச்சயம் சுதந்

(6-ம் பக்கம் பார்க்க)

# டேவிற்சனை விடுதலை செய்!

## தோழர் சுப்பிரமணியம் அறிக்கை

கடந்த30-9-82 1-10-82 ஆகிய இருநாட்களிலும் பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு கோரி ஏழு அமைப்புகளின் சார்பில் துண்டுப்பிரசுரம் அச்சிட்டு விநியோகித்த டேவிற்சனும் ஏனைய இளைஞர்கள் சிலரும் கைது செய்யப்பட்டதும், தாக்கப்பட்டிருப்பதாக கூறப்படுவதும், வடமாகாணத்திற்கு அப்பால் கொண்டு செல்லப்பட்டதும்மோசமான ஜனநாயக மீறல் நடவடிக்கையாகும். இச்செயலை எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின (இடது) சார்பில் தோழர் கே.ஏ சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் பொலிஸ் மாஅதிபர் அண்மையில் விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் சட்டரீதியான ஜனநாயக ரீதியான அரசியல் நடவடிக்கைகளுக்கு எவ்வித தடைகளும் இருக்க மாட்டாது எனக் குறிப்பிட்டிருந்தார். அப்படியாயின் சட்டரீதியாகவும், ஜனநாயகரீதியாகவும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு சுதந்திரமான கருத்தை முன்வைத்த டேவிற்சனும் ஏனைய இளைஞர்களும் கைது செய்யப்பட்டு, தாக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருப்பது ஏன்? இது அப்பட்டமான ஜனநாயக மீறல் சம்பவமாகும்.

டேவிற்சன் சார்ந்துள்ள ஸ்தாபனத்தின் கருத்துகள் பலவற்றுடன் எமது கட்சியின் கொள்கைகள் ஒத்துப்போகவில்லை, அதே வேளை அந்த அமைப்பின் மீதும், அதன் செயலாளர் டேவிற்சன் மீதும் அரசு தொடுத்துள்ள அடக்குமுறை நடவடிக்கைகளையும் ஜனநாயக விரோதச் செயல்களையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். டேவிற்சனையும் ஏனைய இளைஞர்களையும் உடன் விடுதலை செய்யவேண்டும். அல்லது சாதாரண சட்டங்களின் கீழ் நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்யவேண்டும் என எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வற்புறுத்துகின்றது.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களியுங்கள்!

## இல. கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) முடிவு

எமது நாட்டு மக்களை எதிர்நோக்குகின்ற உடனடிக் கடமை தற்போதைய யூ.என் பி. அரசாங்கத்தை தோற்கடிப்பதேயாகும். இக்கடமையை நிறைவேற்ற ஜனாதிபதித் தேர்தல் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதால், மக்கள் இச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி யூ.என்.பி.க்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தேசிய அமைப்புக் கமிட்டி சார்பாக அதன் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கை கூறுவதாவது, தற்போதைய நிலைமைகளில் யூ. என். பி. யைத் தோற்கடிக்கக் கூடிய வல்லமை ஸ்ரீ. லங்கா சுதந்திரக் கட்சிக்கே உண்டு. ஆதலால் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பிரதான எதிர் வேட்பாளரான திரு. ஹெக்டர் கொப்பேகடுவாவை ஆதரிப்பதென முடிவு செய்துள்ளது.

தேர்தலிருந்து ஒதுங்கி இருப்பதோ, அன்றி பகிஷ்கரிப்பதோ யதார்த்த நிலையில் யூ. என்.பி.யை அதிகாரத்தில் நிலை கொள்ளச் செய்வதற்கு உதவிவழங்குவதாகவே அமையுமென எமது கட்சி கருதுகின்றது. எனவே பொது எதிரியான யூ.என்.பி.யைத் தோற்கடித்து அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கு சகல மக்களும் ஸ்ரீ. லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரான கொப்பேகடுவாவுக்கு வாக்களிக்க வேண்டுமென எமது கட்சி வேண்டுகோள் விடுகின்றது.

# பகிஷ்கரிப்பதல்ல; வாக்களிப்பதே இன்றைய தேவை

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களும் கட்சிகளின் முயற்சிகளும் வேகம் அடைந்துள்ள இவ்வேளையில் ஒன்று கவனிக்கக் கூடியதாக இருக்கிறது. மக்களிடையே ஏகாதிபத்திய — முதலாளித்துவ எதிர்ப்புணர்ச்சி மேலோங்கிக் காணப்படினும், அதனை நெறிப்படுத்தி செயல்படுத்த பாராளுமன்றக் கட்சிகளும், தலைமைகளும் போதியளவு தயாராக இல்லை என்பது வெளிப்படை. இன்றைய நிலையில் பிரதான எதிரணி வேட்பாளராகசுதந்திரக் கட்சி அபேட்சகரே சாதாரண மக்களாலும், பொதுவில் இடதுசாரிகளாலும் ஆதரிக்கப்பட வேண்டியவராய் இருப்பினும், அவரும் ஆக்கபூர்வமான வேலைத் திட்டத்தை முன்வைத்து எதிர்ச்சக்திகள் அனைத்தையும் ஒருமுகப் படுத்துவதாக தெரியவில்லை. அதுமட்டுமல்லாது இன்றைய ஆபத்தான சூழ்நிலையிலும்கூட எதிர்க்கட்சிகள் தமக்கிடையும், தமக்குள்ளும் முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொள்வதாய் இல்லை. யூ.என்.பி.க்கு எதிராகவும், ஏகாதிபத்திய எதேச்சாதிகாரத்துக்கும், ஊடுருவலுக்கும் எதிராகவும் மக்களைப் பரந்துபட்ட முன்னணியில் திரட்டும் மாபெரும் அரசியல் வேலைத் திட்டத்திற்குப் பதிலாககட்சிகள் நீயா, நானா என்று பலப்பரீட்சையில் ஈடுபடுவதையே நாம் இன்னும் காண்கின்றோம். உண்மையான ஆபத்தின் தாற்பரியத்தை மக்களுக்கு உணர்த்தாததினாலேயே பகிஷ்கரிப்பு என்ற கோஷத்தைக்கூட சிலர் முன்வைக்க முடிகிறது.

உலக வங்கி, சர்வதேச நாணய சபை, அமெரிக்கா, ஜெர்மன், இங்கிலாந்து, யப்பான், இத்தாலி முதலிய கைத்தொழில் நாடுகளின் கம்பனிகள் போன்ற எல்லாம் போட்டிபோட்டுக் கொண்டு இலங்கையின் செல்வத்தை கொள்ளை கொண்டு போகையில், நம்நாட்டு மக்கள் மிக வேகமாக வெளிநாட்டு உல்லாச பிரயாணிகளின் தேவைகளை திருப்தி செய்யும் பிராணிகளாக மாற்றப்படும் நேரத்தில், கலாசார மரபுகள் தலைகீழாக புரட்டப்படும் நேரத்தில், வெளிநாடுகளில் வேலைதேடி நவீன கொத்தடிமைகளாய் பல்லாயிரக்கணக்கானோர் போய் வருகையில் சுருங்கச் சொன்னால் முன்னொருபொழுதும் இருந்திராத முறையில் சூறையாடப்படுகையில் மக்களின் நியாயமான ஆத்திரத்துக்கும் தர்மாவேசத்துக்கும் உருவம் கொடுத்து அரசியல் போராட்டம் நடத்துவதற்கு பதிலாக பெரும்பாலான எதிர்க்கட்சிகள் வரட்டுத்தன்மானபோக்குகளிலும், அர்த்தமற்ற போட்டா போட்டிகளிலும் காலத்தை கழிப்பது கண்டிக்கப்படவேண்டியதாகும். இன்னும் சிலர் வரலாற்றையே கொச்சைப்படுத்தி எழுதுவதை வியாதியாகக் கொண்டிருக்கின்றனர்.

ஆயினும் தொழிலாளர்கள், விவசாயிகளும், புத்திஜீவிகளும், கலை இலக்கிய ஆர்வலர்களும், அரசியல்உணர்வு படைத்த பொதுமக்களும் நிலைமையை சிந்தித்து பிரதான எதிரணி வேட்பாளரான கொப்பேகடுவாவுக்கு வாக்களிப்பார் என்பதில் ஐயமில்லை. வாய்ப்பேச்சால் அன்றி வாக்களிப்பதினாலேயே அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதியை மக்கள் நிறைவேற்ற முடியும். நமக்கென்னவென்று இருப்பது அரசியல் பாலைவனத்துக்கே மக்களை இட்டுச் செல்லும் என்பதில் ஐயமிருக்க இயலாது.

★

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

## யூ.என்.பி.தாசர்கள் ஒதுங்கிநிற்கிறார்கள்

எழுபத்தேழாம் வருட பொதுத் தேர்தலில் 'ஈழம் பெறுவதற்கு' மக்கள் வாக்கைப் பெற்றதாக கூறிக்கொள்ளும் தமிழர் வியாபார கூட்டணியினர், குறிப்பாக எழுபத்தொன்பதாம் ஆண்டிலிருந்து மெல்ல மெல்ல இரட்டைவேடம் போடத் தொடங்கி இப்பொழுது தமது வர்க்க சுபாவத்திற்கு ஏற்ப அப்பழுக்கற்ற யூ.என்.பி. ஆதரவாளர்களாக விளங்குவதை உலகம் அறியும். நாடு கேட்டுவிட்டு நல்ல ஜீப்களும் வேறு பல சுகங்களும் பெற்றதுடன் எதையும் விற்று எவரையும் காட்டிக் கொடுக்கத் தயாராகி விட்ட கூட்டணித் தலைமையை, இன்று துரோகிகள் என்று மக்கள் வெளிப்படையாகக் குறிப்பிடும் அளவிற்குத் தம்மை அம்மணமாகவே அம்பலப்படுத்திக்கொண்டுள்ளனர்.

ஈழக்கோரிக்கையை கைவிட்டதுமன்றி அதனைத் திசைதிருப்புவதற்காக காணி நிலம் காப்பாற்றுவோம்' என்றும், ''அபிவிருத்தியால் ஆட்சி அமைப்போம் என்றும், 'நிதானத்தால் நிச்சயம் வெற்றி காண்போம்' என்றும், 'ஒற்றுமையால் உண்மை இலட்சியத்தை அடைவோம்' என்றும், வன்செயல்களை விடுத்து சாத்வீக வழியில் செல்வோம்' என்றும் அவ்வப்போது அமிர்தலிங்கத்துக்கே உரிய அடுக்குமொழி சுலோகங்களை மக்களுக்கு விற்றுவந்தனர். காலப்போக்கில் அவையும் தேவையில்லாது போயின. ஜனாதிபதி புகழ்பாடி பரப்புவதே பிரதான கைங்கரியமாக அமிர் கும்பலுக்கு அமைந்தது.

இவை எல்லாவற்றையும் கூட்டணி ஆதரவாளரும், அபிமானிகளும் ஒருவாறு பொறுத்துக்கொண்டு வந்தனர். ஆனால் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அமிர் கும்பல் நடந்துகொண்டுள்ள விதம் அனைவரையும் சினங்கொள்ள வைத்திருக்கிறது.

கூட்டணியின் எஜமானர்களாகிய தமிழ் முதலாளிகள், வணிகர்கள். இறக்குமதியாளர்கள், யப்பான் வியாபாரத் தொடர்புடையவர்கள், மாஜி செனட்டர், உறவினர்கள் முதலியோரின் ஆணைப்படி கூட்டணித் தலைமை இரகசியமாக தமது நெருங்கிய ஆதரவாளர்களை யூ.என்.பி.க்கு வாக்களிக்கும்படி கேட்டிருப்பதுகூட பெரும்பாலானோர்க்கு ஆச்சரியத்தையோ ஆத்திரத்தையோ உண்டாக்கவில்லை; முறைக்குமுறை அதுபோல நடந்ததுதானே. வர்க்க அடிப்படையில கூட்டணி எக்காலத்தும் யூ.என்.பி. பக்கம்தானே. சுதந்திரக்கட்சி பதவிக்கு வரும் காலங்களில் தானே கூட்டணி கொடிபிடிப்பதும், கூக்குரல் எழுப்புவதும், கொக்கரிப்பதும், தமிழுக்காக உரிமை கோருவதும் நடைபெறுவதுண்டு.

அப்பொழுதெல்லாம், அபிவிருத்திபற்றிப் பேச்சு எழும்பாது. காணிச் சீர்திருத்தச் சட்டமாயிருந்தால் என்ன, தேசியமயமாக்கச் சட்டமாயிருந்தாலென்ன, மூற்போக்கானவையாக இருந்தால் எதிர்ப்பது தமது புனித கடமை என்றே அமிர் கும்பல் எப்பொழுதும் கருதிச் செயல்பட்டு வந்திருக்கிறது. அமிர் என்றாலே இடதுசாரி எதிர்ப்பாளர் என்று இலங்கையின் அரசியல் அகராதியில் இடம்பெற்றுவிட்டது. அதனால் அமெரிக்க நிறுவனங்களின் ஆணையின்பேரில் தாய்வானுக்கு போனதுகூட பலருக்கு வியப்பையோ, வெறுப்பையோ அளிக்கவில்லை. மேடைப் பேச்சில் அன்றி உண்மையில் யதார்த்தத்தில் யாருமே அவரை தளபதியாகக் கருதவில்லை; கிண்டலாகத் தள(ர்)பதி என்றேகுறிப்பிடுவர்.

ஆனால் இப்பொழுது அமிர் கும்பல் செய்திருக்கும் வேலை எல்லோருக்கும் தாங்க முடியாத வெறுப்பையும் சீற்றத்தையும் உண்டாக்கியிருக்கிறது. எவ்வாறு நோக்கினாலும், ஜனாதிபதித் தேர்தல் நாட்டின் மூக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்று. தேர்தலில் யார் வெற்றிபெறுவது என்பது ஒருபுறமிருக்க, தேர்தல் காலம் — முன்னும் பின்னும்- எதுவும் என்னவும் நடைபெறக்கூடிய காலமாகும். கடந்தகால வரலாறுகள் அதனை நன்கு நமக்கு நிரூபித்துள்ளன. கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் காவல் புரிய வேண்டிய காலம் இது. இத்தகைய அதிமூக்கியமான நேரத்தில் வெளிநாடுகளில் உல்லாசப் பிரயாணம் மேற்கொள்வது என்றுமே மன்னிக்க முடியாத குற்றமும் துரோகமுமாகும். தலைவர் வேஷம் போட்டு பாராளுமன்ற சலுகைகளையும் அலவன்சுகளையும் பல்லாயிரக் கணக்கில் பெற்றுக்கொண்டதை மனங்கொண்டாவது இந்நேரத்தில் நாட்டிலிருக்க வேண்டாமோ? இனத்தின் பேரில் இத்தனை காலமும் உரிமை பாராட்டிவிட்டு உண்மையாக நெருக்கடி நிறைந்த வேளையில் மக்கள்பால் எத்தகைய பாசமோ- பொறுப்புணர்ச்சியோ இல்லாமல் ஓடித்தப்புவது படுமோசமான நம்பிக்கைத் துரோகமாகும். அமிர்மட்டுமல்ல. வியாபார கூட்டணித் தலைமையே அடுத்துவரும் சில வாரங்களுக்கும் மாதங்களுக்கும் உலகின் பல நாடுகளிலும் உல்லாச பிரயாணத்தை மேற்கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மக்களை நட்டாற்றில் விட்டுவிட்டு நழுவிய கதைதான். மீண்டும் அடுத்த பொதுத்தேர்தலுக்கு தலைகாட்டுவார்கள்; தமிழரின் ஒற்றுமை என்ற குரலில் தமக்கு வாக்களிக்கும்படி கேட்பார்கள். ஏனெனில் அவர்களுக்கு முக்கியம் தமிழர் முன்னேற்றமோ தேச அரசியலோ, இனவிடுதலையோ மக்கள் நல்வாழ்வோ அல்ல. தமது எம்.பீ. ஆசனங்களும் பதவிகளையும் பாதுகாக்க வாழ்பவர்கள் அவர்கள். அதனை நன்கு மக்கள் உணரும்பொழுதே தமிழ் மக்களுக்கு விமோசனமும் விடுதலையும் கிடைக்கும். இன்று கூட்டணிக்கு உள்ளும் புறமும், இந்நாட்டிலிருந்தும் வெளியிடங்களிலிருந்தும் வீசப்படும் கேள்விக்கணைகளையும் கண்டனங்களையும் கவனிக்கும்பொழுது மக்கள் தளர்பதி கும்பலின் தகிடுதத்தங்களையும், ஏமாற்றுவித்தைகளையும், அவதந்திரங்களையும் வர்க்க சுபாவத்தையும் எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களின் பொதுமக்கள் விரோத நிலைப்பாட்டையும் உணரத் தலைப்பட்டுவிட்டார்கள் என்றே தோன்றுகிறது. தமிழ்வாதம் பேசி அரசியல் வியாபாரம் நடத்திய கலைஞர்கருணாநிதி தமிழ் மக்களால் தூக்கி எறியப்பட்டதுபோல, அமிர் கும்பலும், அம்பலப்படுத்தப்பட்டு அரசியல் குப்பைத் தொட்டிக்குள் தூக்கி எறியப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றே தோன்றுகிறது. கெட்டிக்காரன் புளுகும் எட்டு நாளைக்கு என்பது அல்லவா?

★

## அமிருக்கு தனிச்சலுகை!

இன்று பொது மக்கள் தொடர்பு சாதனங்கள் யாவுமே ஏதோ ஒருவிதத்தில் அரசின் செல்வாக்குக்கு உட்பட்டனவாகவே இயங்குகின்றன. ஜனாதிபதி தனது நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள்மூலம் இவற்றை இயன்றவரை நுட்பமாகப் பயன்படுத்துகிறார் என்பது யாவரும் அறிந்த செய்தியாகும். அண்மையில் இச்சாதனங்களுக்கு பொறுப்பாக உள்ளவர்களை மிக உயர்மட்டத் தலைமையினர் சந்தித்து ஜனாதிபதித் தேர்தலுக்கும் அடுத்துவரும் காலகட்டத்திலும் செய்தி, கட்டுரை பிரசுரம், வெளியீடு முதலியன எவ்வாறு அமைய வேண்டும் என்று பணிப்புரை வழங்கினராம். அதில் கூறப்பட்ட முக்கியமான குறிப்புகளில் ஒன்று திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்துக்கு வேண்டிய அளவு பிரசாரம் வழங்க வேண்டும் என்பதாம். அவரை எவ்விதத்திலும் பலவீனப்படுத்தவோ, விமர்சிப்பதோ ஆகாது என்றும், கூட்டணி கட்சிக்கு அதிக பப்ளிசிட்டி கொடுக்காவிட்டாலும் அமிர்தலிங்கத்துக்கு தனிச்சலுகை வழங்கப்படவேண்டும் என்று பணிக்கப்பட்டதாம்.

அது உண்மையான தகவல் என்பது இந்நாட்களில் வீரகேசரி பத்திரிகையைப் பார்த்தாலே தெரிந்துவிடும். திடீரென அமிருக்கு பக்கம் பக்கமாக ஒதுக்கி வருகிறது அப்பத்திரிகை. ஆங்கிலப் பத்திரிகைகளும் வேண்டியளவு 'நுட்பமான' அமிர் சார்பு பிரசாரம் செய்கின்றனர். அதாவது அவரைச் செய்தியில் வைத்திருக்கின்றன. அமெரிக்க பத்திரிகை ஆலோசகர்களின் சிபார்சின்பேரிலேயே அரசாங்க நிபுணர்கள் அமிருக்கு இந்த விசேஷ ஸ்தானத்தை வழங்குகிறார்கள் என்று இங்கு கொழும்பில் விஷயம் அறிந்த அவதானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். தமிழ்ப் பகுதிகளில் வீரகேசரியின் சாயம் கரையத் துவங்கியிருப்பது மட்டுமல்ல, அதற்கு எதிரான ஒரு உணர்வும் இப்பொழுது உருவாகி வருவதைக் காணமுடிகிறது. முதலாளித்துவம் அமிரைத் தனது கைப்பொம்மையாக வைத்துள்ளது என்பதையும் இது நன்றாகக் காட்டுகிறது. எதிர்காலத்தில் தெரிய வரக்கூடிய சில 'பெரிய' விஷயங்களில் கூட்டணித் தலைமை சிக்கியுள்ளது என்பதே பலரது கருத்தாகும். அமிரின் தாய்வான் விஜயம் இத்தகைய சம்பாஷணைகளில் அடிக்கடி வருகிறதாம். இந்தப் பாராளுமன்றத்தின் காலத்தில், நிதியமைச்சர் ரொனி டி மெல், வர்த்தக அமைச்சர் லலித் வெளிநாட்டமைச்சர் சாஹுல் ஹமீத் ஆகியோருக்கு அடுத்தபடியாக தளர்பதி அமிர்தலிங்கமே ஆகக்கூடுதலாக வெளிநாட்டுப் பிரயாணங்களைச் செய்திருக்கிறார் என்று சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

★

# ஜே. வி. பி. யின் அரசியல் தோற்றம் - 1

## 1. முன்னுரை

எந்தவொரு அரசியல் கட்சியும் ஸ்தாபனமும் குறிப்பிட்ட வர்க்க நலன் சார்ந்த ஒன்றாகவே இருக்கின்றன. அரசியல் சூழ்நிலைகளை யொட்டி வெவ்வேறுகட்சிகள் தோற்றத்தில் முற்போக்கான கோஷங்களை முன்வைத்தாலும் அவற்றின் வர்க்கச் சார்பும் அரசியல் சித்தாந்தமும் வேலைமுறைகளும் அவற்றின் உண்மையான தன்மையை வெளிப்படுத்திவிடும். வரலாறு என்கிற அளவுகோலை விகாரப்படுத்துவதன்மூலம் உண்மைகளைச் சிலகாலம் மூடிவைக்கலாம். ஆனால் சமுதாய நடைமுறை இறுதியில் உண்மைகளை வெளியில் கொண்டு வந்தே திரும். ஜே. வி. பி. யின் பணபலமும், உக்கிரமான பிரச்சாரங்களும், ஜே. வி. பி. க்குச் சில உள்ளூர் முதலாளிகளினதும் சர்வதேச மேன்மை ஆதிக்கவாதிகளினதும் ஆதரவும் பிற்போக்கு யூ. என். பி. யின் இரகசியத் தொடர்புகளும் ஜே. வி. பி. பற்றிய மாயையை ஏற்படுத்த உதவியுள்ளன. ஆனால் அந்த மாயை கலையும்காலம் அதிக தொலைவில் இல்லை. 1971இல் ஆயிரக்கணக்கான சிங்கள வாலிபர்களைப் பலியிட்டுக் கற்ற பாடங்களை ஜே. வி.பி. தலைமை மூடிமறைக்கலாம், ஆனால் கசப்பான உண்மைகளை மீண்டும் மீண்டும் தவறுகள் மூலமேதான் அனைவரும் கற்றுகவேண்டிய அவசியமில்லை. எனவேதான், ஜே.வி.பி. பற்றிய சுருக்கமான வரலாற்று ஆய்வொன்றை எழுதுவது பயனுள்ளது என நினைக்கின்றேன்.

## 2. ஜே. வி. பி. யின் தோற்றம்

ஜே.வி.பி.யின் தோற்றம் சர்வதேசரீதியாகமுற்போக்கு இயக்கங்கள் மத்தியில்,குறிப்பாக கம்யூனிஸ்ட் இயக்கத்தினுள் ஏற்பட்ட குழப்பமான குழ்நிலையை ஒட்டியது. லத்தீன் அமெரிக்காவில் சேகுவேராவின் அனுபவவாத அரசியல் வேலைகளும், சீனவில் கலாச்சாரப் புரட்சியும், ஐரோப்பாவில் அராஜகவாதம் உட்பட பல்வேறு குழப்பமான சிந்தனைகளும் எழுந்த காலத்தில்தான் இந்தியாவில் நக்சலைற் இடது தீவிரவாதமும் எழுந்தது. சர்வதேசரீதியாக ஏகாதிபத்திய விரோத விடுதலைப் போராட்டங்கள் வெற்றிமேல் வெற்றி கண்டு வந்ததும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் சுயரூபம் தெளிவாகத் தோன்றத் தொடங்கியதும் அதே காலகட்டத்தில்தான்.

இலங்கையில் 1963 இன் பின் மார்க்சிச — லெனினிச முகாமாகவும் திரிபுவாதமுகாமாகவும் கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டதையடுத்து கம்யூனிஸ்ட் இயக்கத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது. இச்சூழ்நிலையையும் மாக்சிச—லெனினிச முகாமின் தலைமையின் சில தவறுகளையும் பயன்படுத்தி விஜேவீர போன்றவர்கள் 1964 வாக்கில் ஸ்தாபனரீதியாக ஊடுருவ முடிந்தது. விஜேவீர விரைவில் இனங்காணப்பட்டு கட்சியினின்று 1966இல் வெளியேற்றப்பட்டபோதும் வேறு பல விஷமசக்திகளின் தாக்கம் தொடர்ந்தும் கட்சியில் இருந்துவந்தது. திரிபுவாதிகளதும், சமசமாஜீகளதும், பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தால், ஒருபுறமும் மாக்சிச—லெனினிச இயக்கத்தினுள் இருந்த பிரச்சினைகளால் மறுபுறமும் அன்றைய உலகசூழ்நிலையில் இடதுசாரி இயக்கங்களை நாடிவந்த பெருவாரியான வாலிப சக்திகள் இலகுவாக திசைதிருப்ப முடியுமாயிற்று. தொழிலாளி வர்க்கத்தினர் மத்தியில் செல்வாக்கைப்பெற முடியாத விஜேவீரவும் திரிபுவாதிகள் மத்தியினின்று வந்த மகிந்த விஜேசேகர போன்றவர்களும் இளைஞர்களைப் புரட்சியின் உந்து சக்தியாகக்காட்டி அவர்களைக் கவரும் முறையில் அரசியல் வேலைகளில் இறங்கினர். தலைமறைவான இயக்கம், இரகசிய வேலைமுறைபோன்றவை அன்றைய சூழ்நிலையில் பல இளைஞர்களைக் கவர்ந்தன. இவர்களது நடவடிக்கைகள் அன்றைய யூ.என்.பி (டட்லி சேனநாயக) அரசின் கவனத்தை ஈர்த்தன. எனவே ஜே. வி.பி. தலைமையுட்பட பல வாலிபர்கள கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இவர்களது இரகசிய ஸ்தாபன வேலைமுறைகளையிட்டு இவர்களே தங்களை வர்ணித்துக் கொண்ட முறையை வைத்தும் 'சேகுவேராவாதிகள்' என்ற பெயரில் இந்த இயக்கம் அழைக்கப்பட்டது.

1970 தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான மூன்று கட்சிக் கூட்டணியின் வெற்றியையடுத்து ஜே வி.பி கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இதையடுத்து ஜே.வி.பி. பகிரங்கமாகவும் செயற்பட முடிந்தது. புதிய அராசாங்கம் யூ. என் பி.யால் உருவாக்கப்பட்ட விவசாயப் படையைக் (Land Army) கலைத்தது. இத்தப்படை யூ. என். பி. வாலிபர்களையே கொண்டிருந்த ஒரு அரசியல் ஸ்தாபனம் என்பதே அதன் கலைப்புக்கு முக்கிய காரணம். இதனையடுத்து இந்த யூ.என்.பி. வாலிபர்கள் ஜே. வி.பி. யில் இணைந்து ஸ்ரீ. ல. சு. க.வைப் பழிவாங்க முனைந்தனர். இவ்வாறு வர்க்க அடிப்படையில் இல்லாத தெளிவானதொரு அரசியல் சித்தாந்தம் இல்லாது முழுக்கமுழுக்க வாலிப சக்திகளையே அடிப்படையாக கொண்டு ஜே.வி.பி. உருவாகி வளர்ந்தது. இவர்களால் மற்றைய கட்சிகளுள் ஊடுருவிக் கிராமப்புறங்கள் பலவற்றிலும் தங்களை நிலைநிறுத்திக்கொள்ளவும் முடிந்தது. ஆனால் இவர்களது அரசியல், ஸ்தாபன வளர்ச்சியின் தன்மையும் அவற்றின் தவிர்க்க முடியாத எதிர்ப்புரட்சிகர மூளைப்பும் இறுதி வீழ்ச்சியும்பற்றிய விளக்கத்தை அவர்களது அரசியல் சித்தாந்தத்திலும வேலைமுறையிலுமே காணமுடியும். ஜே. வி. பி. தலைமையின் எதிர்ப்புரட்சிகர தன்மை, ஸ்தாபனத்தின் தன்மையையும் அதன் நடைமுறையின் தன்மையையும் நிர்ணயித்தது. ஜே. வி. பி யின் கோஷங்களால் கவரப்பட்டுத் தெளிவினம் காரணமாக ஜே. வி. பி.யில் இணைந்த பல ஆயிரக்கணக்கான வாலிபர்கள் தனிப்பட்ட முறையில் எவருமே எதிர்ப்புரட்சியாளர்களும் அல்ல,புரட்சி விரோத நோக்கம் கொண்டவர்களுமல்ல ஆனால் தெளிவீனமான அரசியல் எவ்வளவு அபாயகரமானது என்பதற்கு இவர்களது முடிவே நல்ல உதாரணமாக அமைகிறது.

## 3. அரசியல் சித்தாந்தம்

ஜே வி.பி தலைவர்கள் சிலர் கம்யூனிஸ்ட் வாலி, முன்னணி போன்ற அரசியல் பின்னணியுடையவர்களாக இருந்தபோதும் அவர்களது அரசியல் சந்தர்ப்பவாதம் அவர்களைக் கம்யூனிஸ்டுகளாக வளர அனுமதிக்கவில்லை. அவர்களது அதிகார ஆசை தம் அரசியல் லாபத்துக்கு உடந்தையாக இல்லாத சகலரையும் எதிரிகளாகவும் பிற்போக்கு சக்திகளாகவுமே காணத் தூண்

**— தேசபக்தன் —**

டியது. இவர்களால் இடதுசாரி இயக்கங்களினின்று வாலிபர்களைக் கவர முடிந்த தேயன்றித் தொழிலாளர்களைக் கவர முடியவில்லை. அதன் நேரடி விளைவாக மாணவர்களையும், இளைஞர்களையும் புரட்சியின் உந்து சக்திகளாகவும் ஸ்தாபனப்படுத்தப்பட்ட தொழிலாள வர்க்கத்தைப் பிற்போக்குச் சக்திகளுள் ஒன்றாகவும் கருதினர். தம்கட்சி ஊழியர்கட்கு இவர்களுடைய முழு அரசியல் போதனையும் ஐந்தே நாளில் ஐந்தே வகுப்புக்களில் பயிற்றப்பட்டன. அந்த ஐந்து பாடங்களில் அரசியல்வரலாறு, பொருளாதார நெருக்கடி, புரட்சி ஆகிய எல்லாமே அடங்கிவிட்டன என்று கருதப்பட்டது. ஆனால் ஐந்து பாடங்களுள் ஒன்று இந்திய விஸ்தரிப்புவாதம் பற்றியது. சீன — இந்திய எல்லைத்தகராற்றிலும், பின்னைய இந்திய வரலாற்றிலும் காணப்பட்ட இந்திய அரசாங்கத்தின் போக்கையிட்டு அக்காலத்தில் பாவிக்கப்பட்ட பதமான இந்திய விஸ்தரிப்புவாதம் இவர்களால் மலையகத் தொழிலாளர்கட்கு விரோதமாகப் பயன்படுத்தப்பட்டது. மலையக சிங்கள விவசாயிகளைக் கவர்வதற்காக இவர்கள் அங்கு இந்திய விஸ்தரிப்புவாதிகளைக் கடலில் தள்ளுவோம் என்றும் பிரசாரம் செய்தார்கள். மற்றும் பிரதேசங்களில் அந்தந்தச் சூழ்லைகட்கேற்ப சாதி இன வேறுபாடுகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இதன் விளைவாக ஜே. வி. பி. தலைமைக்குள்ளும் சாதி அடிப்படையில் முரண்பாடுகள் தலைதூக்கத் தொடங்கின. அதன் விளைவாக 1970 இல் பிளவுகள் பல நிகழ்ந்தன.

ஜே.வி.பி.தலைமைதேயிலைத் தோட்டங்களை மூடிக்கட்டி, மரவள்ளி பயிரிடுவோம் என்றமாதிரி சுலோகங்களை தவிர தெளிவான பொருளாதாரக் கொள்கையோ அரசியல் வேலைத் திட்டமோ இருக்கவில்லை. வன்முறைமூலம் எப்படியாவது அரசுயந்திரத்தை பிடிப்பது என்பதைவிடவேறு எதிலும் திட்டவட்டமான கொள்கையோ தெளிவான ஆராய்வோ இருக்கவில்லை. சோஷலிசம் என்ற கோஷத்தை ஜே.வி.பி. முன்வைத்ததேயொழிய அதை யார் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதுபற்றிய தெளிவு இல்லாமை 1971 கிளர்ச்சிக்குப் பின்னைய சம்பவங்களில் புலனாகியது.

ஒட்டுமொத்தமாக சொன்னால் சோஷலிசம் ஆயுதப் புரட்சி என்ற கோஷங்களைத் தவிர எதுவிதமான தெளிவான மாக்சிச அரசியல் கொள்கையற்றதும்,சந்தர்ப்பவாத முறையில் வாலிபசக்திகளை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டதுமே ஜே.வி.பி. அவர்களது வளர்ச்சியை சாதகமாக்கியவற்றுள் மிக முக்கியமான காரணி. திரிபுவாத, சமசமாஜக்கட்சிகளது சந்தர்ப்பவாத கொள்கைமுறைகள் எனலாம். அதைவிட மார்க்சிசத்தை தம் வசதிக்கேற்ப கொச்சைப்படுத்துவதிலும் ஜே. வி. பி. தலைமை தேர்ச்சி பெற்றிருந்தது. ('நிர்தனபந்தி' எனும் சிங்களப் பதம் செல்வமற்ற வர்க்கம் என்ற பொருளையுடையதும் பாட்டாளி வர்க்கத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதுமாகும். ஜே. வி.பி. தலைமை 'நிர்தனபந்தி' என்ற பதத்தை ஏழைகள் என்று வியாக்கியானம் செய்து பாட்டாளி வர்க்கத்தின் முக்கியத்துவத்தைத் திட்டமிட்டே மறைத்தது. ட்ரொட்ஸ்கியவாதிகள் தொழிலாள வர்க்கம் என்ற பதத்தை தொழிலில் ஊதியம் பெறும் எல்லா வர்க்கங்கட்கும் பிரயோகித்ததும் நினைவுகூரத்தக்கதாகும்.)

## 4. ஸ்தாபன அமைப்பும் வேலைமுறையும்

ஜனநாயக முறையிலான ஸ்தாபன அமைப்பும் வேலைமுறையும் ஜே. வி. பி. யின் தலைமை அறிந்த விஷயங்களுள் அடங்கா. ஜே. வி. பி. யின் ஸ்தாபன அமைப்புக்களில் இரகசியமான வேலைகளும் தலைமைக்குக் கீழ்ப்படிதலும் வலியுறுத்தப்பட்ட அளவிற்கு உட்கட்சி ஜனநாயகமோ வெகுஜனங்களைச் சார்ந்து நிற்பதன் அவசியமோ வலியுறுத்தப்படவில்லை ஆயினும் கட்சி உறுப்பினர்களைப் பொறுத்தவரை மிகவும் உறுதியான கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. ஜே. வி.பி.க்குள் 1970 இல் கலாச்சாரப்புரட்சி' ஒன்றும் நடாத்தப்பட்டது. புகைத்தல்,மது என்பன மட்டுமன்றி காதலுக்குக்கூடத் தடைவிதிக்கப்பட்டது. இது எதிர்வரும் 'புரட்சிகரப்' போராட்டத்திற்கு உறுப்பினர்களை தயார் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கையோ அல்லது ஒரு நீண்டகால வேலைத் திட்டமோ என்பது தெளிவில்லை. ஆனாலும் மேல்மட்ட தலைவர்களது நடத்தை வெளியில் ஒருவிதமாகவும் மறைவில் வேறுவிதமாகவும் இருந்தது பற்றி கட்சிக்குள் இருந்த முணுமுணுப்புக்கள் 1971 கிளர்ச்சியின்பின் உண்மைகள் என்று ஊர்ஜிதமாயின.

வர்க்க அடிப்படையோ, ஆழ்ந்த அரசியல் சித்தாந்த அடிப்படையோ இல்லாமல் வளர்க்கப்பட்ட ஜே வி.பி.யினுள் யூ.என்.பி. வாலிபர்கள் ஈர்க்கப்பட்டது ஒருபுறமிருக்க சி. ஐ. டி. யினரும் ஜே. வி. பி. 'cell' களுள் ஊடுருவுவது எளிதாக இருந்தது. ஜே.வி.பி. தலைமையின் சந்தர்ப்பவாதம் கண்மூடித்தனமான பல நடவடிக்கைகட்கு மேலும் மேலும் வழிகோலியது. ஆரம்பத்தில் 'புரட்சிகர ஸ்தாபனத்தை'க் கட்டியெழுப்புவது என்ற பெயரில் வாலிபர்களைக் கொண்டு போஸ்ற்றர்கள் எழுதுவது. பத்திரிகை விற்பது, கூட்டங்களுக்கு ஆள் திரட்டுவது போன்று பல வேலைகள் உற்சாகத்துடன் செய்விக்க முடிந்தது. ஜே. வி. பி. கூட்டங்களுக்குக் குறைவில்லாமல் ஜனங்கள் போய் வந்தனர். இதன் ஒரு காரணம் யூ.என்.பி. முடங்கிக் கிடந்தமையும் ஸ்ரீ. ல. சு. க. முக்கூட்டு அரசாங்கம் பற்றிய விமர்சனங்களை ஜனரஞ்சகமான முறையில் செய்யும ஒரு மேடையாக ஜே. வி.பி. அமைந்ததுமாகும. ஜே வி. பி.யினரின் பிரசார இயந்திரம் பாராட்டத்தக்க திறமையுடன் இயங்கியது உண்மை. (ஹிட்லரின் இத்தகைய இயந்திரம் 1930க்கு முன்பிருந்தே இருந்தது) ஜே. வி.பி.யிடம் நகர்ப்புறவர்க்கத்தினருக்கு ஏற்பட்ட கவர்ச்சி அதிசயத்துக்குரியதல்ல. இது ஆழமான ஈடுபாடு அல்ல எனினும் அரசாங்கப்பற்றிய அதிருப்தியை வெளிக்காட்ட ஒரு வடிகாலாக யூ. என். பி. இல்லாத இடத்துக்கு ஜே. வி.பி அன்று பயன்பட்டது.

திரளான ஜனக்கூட்டங்களும அரசியல் வகுப்புக்களும் நீண்ட காலத்துக்கு வாலிபர்களைத் திருப்திப்படுத்தவில்லை. அடுத்த நடவடிக்கை என்ன என்ற கேள்வி இயல்பாகவே எழுந்தது. புரட்சிக்கு ஆயுதங்கள் சேர்ப்பது அடுத்த நடவடிக்கையாகியது. கட்டிப்பால், தகரங்கள். ஆணிகள், பழுதடைந்த மின்குமிழ்கள் போன்று பல பொருட்கள் சேகரிக்கப்பட்டன. கைக்குண்டுகள் தயார் செய்வதும், ஆயுதம் திரட்டுவதும், பெருமளவில் ஆயுதப்பயிற்சிவகுப்புகளும் தொடர்ந்தன. ஆயுதசாலை ஒன்றில் ஏற்பட்ட விபத்து ஒன்றையடுத்துப் பொலிஸ் துரித நடவடிக்கையில் இறங்கியது. (சி. ஐ. டி. யே இந்த நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கியது என்ற கருத்து பரவலாக நிலவியது. ஆனால் ஊர்ஜிதமாகவில்லை.) ஜே. வி.பி. தலைமையும் தலைமறைவாகஇயங்க ஆரம்பித்தது. ஆயினும் ஏப்ரல் கிளர்ச்சிக்குச் சில நாட்கள் முன்னதாக விஜேவீர அம்பாறையில் பொலிசாரால் ஒரு அரசியல் வகுப்பின் பின்பு கைதானார். அவ்வளவு பிரபலமான தலைவரான மஹிந்த விஜேசேகரவும் கைதானார். (விஜேவீரா வேண்டுமென்றே தன் உயிரைக் காப்பாற்ற வேண்டிக் கைதானார் என்ற ஒரு கருத்து நிலவியது. அதேசமயம் ஜே.வி. பி.யின் ஒவ்வொரு நடவடிக்கையும் சி.ஐ.டி க்குத் தெரிந்திருந்தது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. இரண்டிலுமே உண்மை சிறிது இருந்திருக்கலாம்.) ஆயினும் 71 ஏப்ரல் கிளர்ச்சிக்கு ஜே. வி.பி. போதியளவு ஆயத்தமாக இருந்தது என்பதைவிட நிகழ்ச்சிகளின் துரிதகதிஅவர்களை ஆயுதப் போராட்டத்தை நோக்கி வேகமாக உந்தியது என்பது சரியென்று தோன்றுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

# ஜே. வி. பி. யின் அரசியல் தோற்றம் - 2

## 5. ஏப்ரல் கிளர்ச்சி

1971 ஏப்ரல் கிளர்ச்சி பொலிஸ் நிலையங்கள்மீது ஏககாலத்தில் தாக்குதல் தொடுத்து ஆரம்பிக்கப்படவிருந்தது. திருமதி பண்டாரநாயகாவைக் கைது செய்ய அல்லது ஒழித்துக் கட்டத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. பொலிஸ்நிலையங்கள் மீதான தாக்குதல் முன் பின்னாக நடந்ததால் பொலிசாரும், ராணுவமும் எதிர்நடவடிக்கைகள் எடுப்பது சற்று எளிதாயிற்று. ஆயினும் சில பிரதேசங்களில் ஓரிரு வாரங்கட்கு பொலிஸ் நிலையங்களையும் முழுப்பிராந்தியங்களையும் கிளர்ச்சிக்காரர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் வெகுஜன ஆதரவற்ற நிலையில் ஜே. வி. பி.யின் தோல்வி தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. விவசாயிகள் மத்தியில் சிறிது ஆதரவுபெற்ற ஓரிரு பகுதிகளில் சிலகாலம் நீடித்துப் போராட முடிந்தது. ஆனால் தொடங்கிய ஒரு வாரத்துக்குள்ளேயே கிளர்ச்சியின் தோல்வி தெளிவாகிவிட்டது.

இராணுவமும் பொலிசும் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டன. இரண்டாயிரத்துக்கும் மூவாயிரத்துக்கும்இடையிலான வாலிபர்கள் இறந்தனர் என மதிப்பிடலாம். அரசாங்கத்தின் எதிரிகள் இறந்தவர் தொகையை ஐந்து, பத்தாயிரம் என்றும் அரசாங்கத்தினர் ஆயிரத்துச் சொச்சம் எனவும் மதிப்பிட்டன. கிளர்ச்சியின் போது தமிழரசுக்கட்சி எம். பி.க்களும் யூ.என்.பி.யினரும் சேர்ந்து சீனமீது பழி சுமத்தினர். கிளர்ச்சி தொடங்கியதை அறிந்தவுடனே சூ என்லாய் இலங்கை அரசாங்கத்தை ஆதரித்துக் கிளர்ச்சியை எதிர்ப்புரட்சி என வர்ணித்து விடுத்த அறிக்கையும் அவசியமான நிதியுதவி தருவதாகசொன்ன செய்தியும் வேண்டுமென்றே சிலரால் இருட்டடிக்கப்பட்டது.

கிளர்ச்சியின் தோல்வியை அடுத்து பொலிசினதும் முப்படைகளும் விஸ்தரிக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்டன. கிளர்ச்சியுடன் தொடர்புடையதாக கருதப்பட்ட ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். எனினும் இறுதியில் மிகக்குறைவான பேரே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். பெருவாரியானோரின் தண்டனை ஒத்தி வைக்கப்பட்டது பலருக்குச் சமூதாயத்தில் புதிய வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டன.

ஜே. வி. பி. ஏப்பிரல் கிளர்ச்சி வழக்கில் அரசியல் இலாபந்தேட முனைந்தவர்களில் பாலாதம்பு போன்ற ட்ரொட்ஸ்கியவாதிகள் முக்கியமானவர்கள் சிறையில் இருந்த காலத்தில் விஜேவீரவின் நெருங்கியசக்திகள் பலருக்கு ஜே. வி.பி.யின் தவறுகள் புலனாகத் தொடங்கின. இதன் விளைவாக விஜேவீரவும்ஒருசிலரும் மிகவு தனிமைப் படுத்தப்பட்டனர். வழக்கு விசாரணையின்போது சிலர் அரசாங்கத்தரப்புச் சாட்சிகளாயினர். வேறு சிலர் அவ்வாறு செய்யாமல் விஜேவீரவையும் ஜே. வி. பி. யின் அரசியலையும் விமர்சித்தனர்.

## 6. புனர்ஜன்மம்

1975 இன் பின்பு ஜே. வி.பி.யிலிருந்து பலரும் விலகினர். சிலர் யூ.என்.பி.க்கு சிலர் ஸ்ரீ.ல. சு. கட்சிக்கும் சென்றனர். வேறு சிலர் ஜனதா சங்கம் என்ற ஸ்தாபனத்தில் இணைந்தனர். கணிசமானோர் அரசியலையே துறந்தனர்.

1976 ல்சில சந்தர்ப்பவாதிகள் ஸ்ரீ.ல.சு.க. யிலிருந்தும் விலகினர். இந்தச் சூழ்நிலையில் யூ.என்.பி.யினர் ஒரு முக்கிய மாஜி ஸ்ரீ.ல.சு.க. பிரமுகர்மூலம்சிறையிலிருந்த ஜே.வி.பி, தலைவரான விஜேவீரவுடன் தொடர்பு பூண்டனர் இதன்விளைவாக ஜே. வி.பி.க்கு பாலாதம்புவின் ட்ரொட்ஸ்கிய வாதிகளுடனை உறவினும் பன்மடங்கு பயனுள்ள ஒரு புதிய அரசியல் உறவு உருவானது.

1977 தேர்தலில் விஜேவீரவுக்கு விசுவாசமுள்ள சக்திகள் யூ. என். பி. யுடன் நெருங்கி நின்றன. ஆயினும் திரிபுவாதிகளும் சமசமாஜிகளும் வேறும் தவறான 'இடது' சக்திகளும் ஸ்ரீ.ல.சு.கவை எதிர்த்து நின்றதால் ஜே. வி. பி.யின் வேஷம் அம்பலமாகவில்லை.

யூ'என்.பி.யின் வெற்றியையடுத்து சிறை சென்ற சொற்ப ஜே.வி,பி:யினர் அனைவருமே விடுதலையாயினர்; விஜேவீர தன் நன்றிக் கடனை செலுத்த ஆரம்பித்தார். யூ.என்.பி.க்கும், ஜே. வி.பி.யினருக்குமிடையிலான பொது அடிப்படை ஸ்ரீ. ல. சு.க.வை எதிர்ப்பது என்று தெளிவாகிறது. எனவே ஜே. வி.பி. க்கு யூ.என்.பி. சகல முறைகளிலும் தன் ஆதரவை வழங்கியது. 1978 மேதினத்திற்கும் பின்னைய மேதினங்கட்கும் மைதானத்தை ஒதுக்குதல், சில முதலாளித்துவ நிறுவனங்களினின்று ஜே.வி.பி.க்கு உதவிகள், மற்றும் சலுகைகள் போன்று பல்வேறு வழிகளிலும் யூ.என் பி. செய்த உதவிக்கே ஜே. வி;பி. சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீதான தன் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள்மூலம் நன்றி செலுத்தியது. ஏப்ரல் 1971இல் ஜே.வி.பி. மீது கூட்டரசாங்கம் எடுத்த நடவடிக்கை போதாது என்ற தொனியில் பேசிய யூ.என்.பீ-யினர் 1977க்குப்பின் இறந்த வாலிபர்கட்காக முதலைக் கண்ணீர் வடித்தனர். 1971 கிளர்ச்சி ஏககாலத்தில் யூ.என். பி.க்கும் ஜே.வி.பி.க்கும் பிரசார சாதனமாயிற்று. இவ்வாறு இலங்கை அரசியலில் மிகவும் விஷமத்தனமான பிற்போக்கு நேச அணி உருவானது.

# II

## 1. மறு ஆரம்பம்

1977ல் யூ. என், பி. யின் வெற்றியை அடுத்து விஜேவீரவும் மற்றும் குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஜே.வி.பி. தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் ஜே.வி.பி.யின் முன்னைய தலைமையில் இருந்த பெரும்பாலானோர் ஜே. வி. பி.யின் அரசியல் பிழைகளை உணர்ந்து கொண்டாலும் அவற்றைத் திருத்தித் தம்மைச் சரியான பாதையில் செலுத்தும் நிலையில் இருக்கவில்லை. இவர்களுக்கு ஏற்பட்ட அரசியல் விரக்தி இடதுசாரி அரசியலினின்று இவர்களை ஒதுக்கியது. விஜேவீரவுடன் எஞ்சிய ஒரு சில முன்னணி ஜே.வி.பி.யினரில் லயனல் போபகே தவிர மற்றவர்கட்கு விஜேவீர தலைமையில் அதிகநம்பிக்கை இருக்கவில்லை. ஜே.வி.பி, யூ. என். பி. யின் அரசியல் நலனுக்காகப் பயன்படுத்தப்படும் நிலையை எதிர்த்தாலும் அதனால் பயன் இல்லாததனாலும் அவர்கள் காலப்போக்கில்விலகினர் அல்லது விலக்கப்பட்டனர். ஆனால் விஜேவீர தலைமை ஜே,வி.பி. யை மறுபடியும் கட்டியெழுப்புவதிலும் தன்னைச்சூழக் குருட்டு விசுவாசமுடைய ஒரு கும்பலை வளர்ப்பதிலும் வெற்றி கண்டது. இது எவ்வாறு சாத்தியமானது என்றும் இவர்களது வளர்ச்சியின் தன்மையும் பின்னணியும் என்ன வென்றும் பழைய ஜே.வி.பி. கும்பு புதிய ஜே.வி.பிக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள் என்னவென்று மேற்கொண்டு கவனிப்போம்.

## 2. புதிய நேச சக்திகள்

1977வரை ஜே.வி.பி. தலைமைக்கு பாலாதம்புவின் உதவி தேவைப்பட்டது. ஜே. வி.பி.யை முற்போக்கு சக்தியாகக் காட்டவும் அதற்கு மார்க்சிச அத்தாட்சிப் பத்திரம் வழங்கவும் பாலாதம்பு முன்வந்தார். பதிலுக்கு 'ஸ்டாலினிச'த்தைத் தாக்கவும் ட்ரொஸ்கி பற்றி நாலு நல்வார்த்தைகள் கூறவும் விஜேவீர இசைவு காட்டினார். ஆனால் சிறைக் கதவுகள் திறந்தபிறகு விஜேவீரவின் தேவைகளை நிறைவு செய்யப் பாலாதம்புவின் தொழிற்சங்க உண்டியலில் போதிய பணமோ ஸ்தாபனரீதியான வலிமையோ இருக்கவில்லை. சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு எதிரான விஜேவீரவின் மனநிலை சோவியத் அதிகார வர்க்கத்துக்கு இஷ்டமான ஒன்றாகவே இருந்த போதிலும் அவர்களது நிரந்தர ஏஜன்டுகளான திரிபுவாதிகளுக்கு ஜே.வி.பி. யிடம் கொந்தராத்துப் போய்விடும் என்ற அச்சமும் விஜேவீரவின் எதிர்கால வளர்ச்சிபற்றிய நிச்சயமின்மையும் கிரெம்ளின் கூடாரத்தில் விஜேவீர பற்றிய தயக்கத்துக்கு இடமளித்தன. ஆனால் யூ.என்,பியைப் பொறுத்தவரை விஜேவீர ஒரு கடிவாளமிடப்பட்ட ஐந்து. அவர்களால் விஜேவீரமூலம் பழைய இடதுசாரிக் கட்சிகளைத் தாக்கவும் அதைவிட முக்கியமாக சிறிமா பண்டாரநாயகாவையும் ஸ்ரீ. ல. சு. க. யையும் தாக்கவும் முடிந்தது. இக்கைங்கரியத்துக்காக அவர்கள் விஜேவீரவை ஒரு உண்மையான இடதுசாரி என்று பாராட்டவும் செய்தனர். அதுமட்டுமன்றி விஜேவீரவின் அரசியல் வளர்ச்சிக்கு உரிய உதவிகளும் வழங்கப்பட்டன. 1978 மேதினத்துக்கு சிறிலங்காசுதந்திரக் கட்சிக்கு வழமையாகப் பயன்படுத்தும் மைதானம் ஜே.வி. பி.க்கு ஒதுக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் ஜே.வி.பி க்கே வருடாவருடம் அந்த மைதானம் வழங்கப்பட்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி நடத்தும் கூட்டங்களும் மற்றும் யூ.என்.பி. விரோத கூட்டங்களும் யூ.என்.பி.க் குண்டர்களால் குழப்பப்பட்ட சமயம் ஜே.வி.பி.க் கூட்டங்கள் இடையூறின்றி நடாத்தப்பட்டன. ஜே.வி.பி.யின் நிதி வசதி (அவர்களுக்கு தொழிற்சங்க ஆதரவோ பெருந்தொகையான பணம் உதவ வல்ல உழைக்கும் உறுப்பினர்களும் அனுதாபிகளும் இல்லாதபட்சத்தில்) அதிகமாக இருந்திருக்க முடியாது. ஆயினும் 1978 — 79 இல் ஜே. வி.பி.க்குச் சில முதலாளித்துவ நிறுவனங்கள்மூலம் பலவிதமான சலுகைகள் வழங்கப்பட்டன. இவற்றின் மூலம் ஜே.வி.பி.யால் நாடு பூராவும் கூட்டங்கள் நடத்தவும் தங்கள் ஸ்தாபனத்தை வளர்க்கவும் முடியுமாயிற்று. ஆனாலும் முன்புபோலவே இளைஞர்கள் மத்தியிலேயே அவர்களது ஆதரவு தேங்கி நின்றது.

விஜேவீரவின் அரசியலில் உள்ளூரில் சிறிமாவோ பண்டாரநாயகா எவ்வளவு பெரிய எதிரியோ அதேயளவுக்கு சர்வதேச அரசியலில் சீன எதிரி எனலாம். சீன ஜே. வி. பி. யுடன் எதுவித உறவும் அனுதாபமும் காட்டாதமை மட்டுமன்றி இலங்கையின் மாக்சிச—லெனினிச சக்திகள் ஜே வி. பி. பற்றிச் செய்த மதிப்பீடும் விமர்சனங்களும் ஜே. வி. பி. யைச் சீன விரோத நிலைப்பாட்டில் உறுதிப்படுத்தின. அத்துடன் பாலா தம்புவின் உதவியும் இதற்கு ஒரு துணைபலமாக இருந்தது. எனவே 1978—79 இல் ஜே.வி.பி. வியட்னும் புரட்சியை ஆதரித்தும் சீனப் புரட்சியை 'காப்பாற்றவும்' நடத்திய கூட்டங்களில் சீன மீது கடுமையான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. இது மொஸ்கோவின் கவனத்தை ஈர்த்ததில் வியப்பில்லை. எனவே ஜே.வி.பி.யின் உண்டியலில் லீடுவானின் 'டொங்' மட்டுமன்றி பிரெஷ்னேவின் 'ரூபிள்'களும் விழவாய்ப்பு ஏற்பட்டது. ஆயினும் ஜே. வி.பி. க்கு நேரடியான அங்கீகாரம் வழங்குவதில் மொஸ்கோவிற்கு பல பிரச்சினைகள் இருந்தன. மறைமுகமான ஒரு உறவு இருதரப்பினருக்கும் வசதியாக அமைந்தது. சர்வதேச அரசியலில் மொஸ்கோவை நேரடியாக ஆதரிக்காமல் சீனவைத்தாக்கவும் மொஸ்கோவின் பிற எதிரிகளைத் தாக்கவும் ஜே. வி பி. முன்வந்தது. அதே சமயம் ஆப்கானிஸ்தான், போலந்து போன்ற பிரச்சனைகளில் வாய்மூடி மௌனமாக இருந்தது. 1981 இல் ஈராக்கை ஆதரித்தும்ஈரானைஎதிர்த்தும் கொழும்பு முழுவதும் ஜே. வி.பி.சுவரொட்டிப் பிரசாரம் செய்தது. 1979இன் பின் வியட்னுமின் வண்டவாளங்கள் வெளியானதையடுத்து சீன வியட்னும் பிரச்சினையில் வியட்னுமிற்கு இலங்கை மக்களிடையே அனுபாபம் இல்லாமையால் வியட்னும் புரட்சியைக் 'காப்பாற்றும்' பணியை ஜே.வி.பி, மெல்லக் கைவிட்டுவிட்டது.

ஜே வி.பிக்கு மொஸ்கோவின் ஆதரவு பல்வேறு வழிகளிலும் மறைமுகமாகக் கிடைப்பது யூ என்'பி.க்குத் தெரியாமல் இல்லை. ஆயினும் அவர்களது உடனடித் தேவைகளை நிறைவேற்ற சிறிலங்கா சுதந்திரகட்சியை முறியடிப்பதும் யூ.என்.பி. சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தவும் ஜே.வி,பி. அளிக்கக் கூடிய பங்கை அவர்கள் உணருகிறார்கள். மொஸ்கோவும் ஜே'வி,பி.யின் யூ.என். பி, தொடர்புகளை நன்கு அறிந்திருந்தும்கூட ஜே.வி.பியின் சீனவிரோத, சிறிமாவோ பண்டாரநாயகா விரோதமான அரசியலை நன்கு அறிந்துள்ளதாலேயே ஜே' வி.பியை ஊக்குவிக்கிறது.

## 3. ஜே.வி.பி,யின் வேலைமுறை

ஜே.வி.பி.யின் பிரசார முறை எந்தவொரு பாராளுமன்ற அரசியற் கட்சியும் பொறாமை கொள்ளத் தக்க முறையில் அமைந்துளது எனலாம். கையால்எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான பிரமாண்டமான சுவரொட்டிகள் அச்சிடப் பணமில்லை என்ற காரணத்தால் சிக்கனத்துக்காகச் செய்யப்படுவன என்ற பிரமையைச் சிலருக்கு ஏற்படுத்தலாம்; ஆனால் காகிதச் செலவும், மைச்செலவும் தனித்தனியாக போஸ்டர்கள் வரைவதில் ஓவியச் செலவும் அச்சிடுவதிலும் பெருமளவு அதிகமானவை. பிரச்சாரவேலைகட்கு என்றே நூற்றுக் கணக்கில் முழுநேர ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். போஸ்டர்கள் ஒட்டுவது கூட்டங்களுக்கு வீதிகளையும் மேடையையும் அலங்கரிப்பது, பத்திரிகை விநியோகம் போன்ற வேலைகளும், நிதி திரட்டும் வேலைகளும் கணிசமான அளவில் முழுநேர ஊழியர்களாலேயே செய்யப்படுகின்றன. உண்டியல்கள் மூலம் திரட்டப்படும் பணம் மிகவும் அற்பதொகையே எனினும் அது அரசியல் பிரசாரத்திற்குப் பெரிதும் பயன்படும் ஒரு காரியமாகும்.

ஜே.வி பி'யின் மேதின ஊர்வலங்களுக்குப் பெரும் தொகையாக செலவிடப்படுவது யாவரும் அறிந்ததே. சீருடைகள் அலங்காரங்கள் மற்றும் பயணசெலவுகள் ஒரு புறம் இருக்க ஊர்வல, மேடை அலங்கார செலவுகள் தொழிற்சங்க நிதிவசதிகள் உள்ள கட்சிகளைவிட பெரும் அளவில் போகின்றன. இத்தனைக்கும் ஜே. வி. பி. யிடம் தொழிற்சங்கம் என்று குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஒரு ஸ்தாபனம் இல்லை. மேதின ஊர்வலத்தில் வாலிபர்களும் இளம்பெண்களும், சிறு குழந்தைகளிம் பெருமளவில் பங்குபற்றும் 'புதுமை யை' ஜே.வி.பி, உண்டாக்கியது. யூ,என்.பி.யின் மேதின பச்சைக் கொடித் தமாஷாவும் கேளிக்கையும் தொழிலாளி வர்க்கப் போராட்ட நாளை எவ்வாறு இழிவுசெய்தனவோ அவ்வாறே ஜே.வி. பி,யின் கேளிக்கை ஊர்வலமும் இழிவு செய்தது.

1977 இலேயே பாராளுமன்ற அரசியல் விஜேவீரவைக் கவர்ந்து விட்டது. யூ.என்.பி.விரோத வாக்குகளைப் பிரிக்க ஜே.வி.பி. உதவுவதால் யூ. என். பீக்கு ஜே.வி.பியின் பாராளுமன்ற அரசியல் பிரவேசம் விரும்பத் தக்கதாக அமைந்தது. யூ.என்.பி. விரோத சக்திகளிடையே குழப்பத்தை

(5-ம் பக்கம் பார்க்க)

# ஒரு புராணக் கதை

பஸ்மாசுரன் கதை சில பேருக்குத் தெரியாமல் இருக்கலாம். சிவபெருமான் பஸ்மாசுரனுக்கு ஒரு வரம் கொடுத்தாராம். அதன்படி அவன் யார் தலையில் கை வைத்தாலும் அவர் தலை வெடித்து இறந்து விடுவார். வரம் கிடைத்ததும் பஸ்மாசுரன் சிவபெருமானையே விரட்ட ஆரம்பித்துவிட்டான். பிறகு விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து அசுரனை ஏமாற்றி அவன் தலையில் அவனையே கைவைக்கச் செய்து ஒருபடியாக சிவபெருமானைக் காப்பாற்றினார். அரசியலில் பஸ்மாசுரன்கள் சகஜம். மோகினி அவதாரங்கள் அபூர்வம். அமிர்தலிங்கம் பெருமான் பகிஷ்காரசுரன் என்ற ஒரு அசுரனுக்கு வரம் கொடுத்துவிட்டு இப்போது அவஸ்தைப்படுகிறார். பகிஷ்காரசுரன் அமிர்தலிங்கப் பெருமானை அடுத்த பாராளுமன்றத் தேர்தலிற்கு அப்பாலும் ஓடஓட விரட்டும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. போதாதற்கு பொன்னம்பல நாதரையும் அசுரன் விரட்ட ஆரம்பித்து இருக்கிறான். இவர்களையெல்லாம் யார் காப்பாற்றப் போகிறார்களோ தெரியவில்லை.

★

# வாக்குச் சாவடியும் வழக்கு மன்றமும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகருக்கு வாக்களித்து அவர் வென்றால் நீதிமன்றத்தில் அவரது வேட்புக்கு விரோதமான வழக்குத் தொடரப்பட்டு அவர் தோல்வியடையலாம் எனவும், அதனால் அவருக்கு ஆதரவு தருவது ஆபத்தானது என்றும் தனக்கே ஆதரவு தர வேண்டுமென்றும் கொல்வின் வாதாடி வருகிறார். போன தேர்தலில் ஸ்ரீ. ல. சு. க.வை எதிர்த்து அதன் மூலம் யூ. என். பீ.யின் வெற்றிவாய்ப்புக்களை அதிகரித்த சமசமாஜிகளும் திரிபுவாதிகளும் இன்று பிளவுபட்டு நிற்கிறார்கள். போன தேர்தலின்போது ஸ்ரீ. ல. சு. க.வைத் தாக்கியதால் இவர்கள் மேலும் தங்களையே அழிவுக்குள்ளாக்கிக் கொண்டனர். தற்பொழுது திரிபுவாதிகள் தந்திரமாக சமசமாஜிகளிடமிருந்து தங்களைப் பிரித்துக் கொண்டனர். தங்கள் நிபந்தனைகளுக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர் உடன்பட்டுள்ளதாகப் பிரகடனம் செய்துள்ளார்கள். என்ன நிபந்தனை என்றோ எப்போது என்றோ தெரிவிக்க தவறிவிட்டார்கள். ஒருவேளை ''நீங்கள் சொல்வதையெல்லாம் நாங்கள் சொன்னதன் பேரில் நீங்கள் சொன்னதாக நாங்கள் சொன்னால் அதைக் கண்டும் காணாதமாதிரி இருங்கள்'' என்ற நிபந்தனையோ அல்லது தங்கள் கனவில் அப்படி ஏதாவது ஏற்பாடு செய்து கொண்டார்களோ தெரியாது.

திரிபுவாதிகளாலும் கைவிடப்பட்டு கொல்வின் ஆதரவாளர்கள் மேலும் பிளவுபட்டுப் பிரிந்து நிற்கும் இந்த நிலையில் யூ.என்.பி. எதிர்ப்பு வாக்குகள் சிலவற்றைத் தன் பக்கம் திருப்பும் நப்பாசையில் ஏதோ கொல்வின் பிதற்றியிருக்கிறார். தேர்தலில் ஸ்ரீ, ல.சு.க. வேட்பாளர் வெற்றி பெற்றால் அதன்பிறகு கொல்வினே நீதிமன்றம் போகக் கூடும்! இன்றைய சூழ்நிலையில் முக்கியமானது நாளைய நீதிமன்ற வழக்கல்ல. யூ.என். பி.யின் சர்வாதிகாரத்தினை முறியடிப்பதேயாகும். கொப்பேக்கடுவைக்கு அளிக்கப்படும் வாக்குகளின் மூலம் கொல்வின் கூறும் ஆபத்து முக்கியமானதல்ல. கொல்வினின் கட்டுப்பணம் பறிபோகும் ஆபத்தே அவருக்கு உண்மையில் முக்கியமானது. பாவம் கொல்வின். வாக்குச்சாவடியையும் வழக்குமன்றத்தையும் போட்டுக் குழப்பியடிக்கிறார்.

★

சம்பவங்களும் அதன் போக்குகளும்

... அவதானி ...

# தமிழர் தலைமைகளும் பத்திரிகைகளும்

தமிழ் மக்களின் பிரச்சனைகளை சிங்கள மக்கள் மத்தியில் கூறவும் அவர்களது நியாயமான கோரிக்கைகளையும் போராட்டங்களையும் சிங்கள மக்களிடம் விளக்கவும் நம் நாளேடுகள் ஆயத்தமாக இல்லை.

(6-ம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பி.யின் அரசியல் தோற்றம் - 2

## 4-ம் பக்க தொடர்

விளைவிக்கவும், 'இடதுசாரி' நிலைப்பாட்டிலிருந்து யூ.என்.யை விட சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிற்போக்கானது என்று பிரசாரம் செய்யவும், யூ.என்.பி விரோத சக்திகளின் கூட்டங்களைக் குழப்பவும் ஜே.வி.பி. நன்கு பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாகவே 1980 முடிவு வரை யூ.என்.பி. ஜே.வி.பி. மீது எதுவிதமான தாக்குதல்களையும் தொடுக்காதிருந்தது. இதன்பின்னர் 1981 ல் சிறிலங்காசுதந்திரக் கட்சியில் ஏற்பட்ட பிளவையொட்டியும் 1981 மாவட்ட சபைத் தேர்தல்களில் தெளிவாகவே தெரிந்த யூ. என். பி. யின் செல்வாக்கின் சரிவையடுத்தும் கூடிய விரைவில் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவது உசிதம் என யூ.என். பி.த் தலைமை கருதியது. அத்துடன் யூ.என்.பி.க்கும், ஜே.வி.பி. தலைமைக்குமிடையிலான நட்புப்பற்றி மக்களுக்குத் தெளிவாகிவிடவே, ''அடிக்குமாப்போல் அடிக்கிறேன் அழுமாப்போல்அழு' என்று யூ.என்.பி. தலைமை ஜே. வி. பி.யை மேடைகளில் தாக்க ஆரம்பித்தது: இதன் விளைவாக சனங்களுடையே தொய்வு கண்டிருந்த ஜே.வி.பி. பிரச்சாரம் சற்றே சூடு பிடிக்கத் தொடங்கியது இருந்தபோதும் ஜே. வி. பி. பற்றி யூ.என்.பி.யின் மிரட்டல்கள் பேரளவிலேயே இருந்தன. ஜே.வி.பி.பின் ஆயுதக் குவிப்பும் பயங்கரவாத வேலைத்திட்டங்களும் பற்றிய பேச்சுக்களும் வடக்கிலுள்ள தீவிரவாத இளைஞர்கட்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான தொடர்பு பற்றிய பொலிஸ் எச்சரிக்கைகளும் மேடைகளுடனேயே நின்றுவிட்டன. ஜே. வி. பி. க்கு இதன்மூலம் தீவிரவாத இளைஞர்கள்மத்தியில் சிறிது பிரபல்யம் கிடைத்தாலும் விஜேவிர அதைவிடப் பாராளுமன்ற அரசியலையே முக்கியமாகக் கருதி பாராளுமன்ற அரசியல் முறைக்கு தன் பூரண விசுவாசத்தைப் பிரகடனம் செய்துகொண்டார். ஜே.வி.பி.யினதும் யூ.என்.பியினதும் பிரசாரங்களின் தாக்குதலுக்குப் பிரதான இலக்காக தொடர்ந்தும் சிறிலங்கா சுதந்திரகட்சியாகவே இருந்துவந்தது.

## 4. கொள்கையும் கோமாளித் தனமும்

யூ.என்.பி. 1982 ஆகஸ்டில் பாராளுமன்றத் தேர்தலை நடத்த போட்ட திட்டம் மழையின்மையாலும் பின்பு வெள்ளத்தாலும்தவறிவிட்டது. ஆயினும் நாட்டிலுள்ள குழப்பமான அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்த வேறு சந்தர்ப்பம் வருவது சந்தேகம் என்பதால் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே வைக்கத்திட்டமிடப்பட்டது. ஜே. ஆருக்கு விரோதமான பொது அபேட்சகர் நாட்டின் யதார்த்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகராகவே இருந்திருக்க முடியும். இதைக் குழப்பியடித்து ஜே. ஆருக்கு உதவுவதில் ஜே.வி.பி. தன் பங்கை ஆற்றியது மட்டுமன்றித் தங்கள் பிரசார வேலைகள் மூலம் ஜே. ஆருக்கு விரோதமான சக்திகளை ஸ்ரீ. ல.சு.க.க்கு விரோமாகத் திருப்புவதிலும் தன்னாலான பங்கைச் செய்துவருகிறது.

ஜே.வி.பி.யின் வேலை முறைகளில் பாராளுமன்ற அரசியலின் இலக்கணமான போலி வாக்குறுதிகள், அர்த்தமற்ற கோஷங்கள், வெற்றுத்தனமான சுலோகங்கள் மட்டுமன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே. வி. பி, விரோத கட்சிகளின் கூட்டங்களைக் குழப்பும் காடைத்தனமும் உள்ளடங்குவன. ஜே.வி. பி.யின் பிரசார முறையில் பாசிசத்தின் வாடையைப் பலரும் அவதானித்துள்ளனர். ஆயினும் ஆழத்தில் ஜே. வி. பி.க்கும் யூ. என். பி.க்கும் மிடையிலான சந்தர்ப்பவாத உறவே ஜே.வி.பி.யின் வேலை முறைக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

முதலாளித்துவ அரசுயந்திரத்தை பாராளுமன்றமூலம் மாற்றலாம் என்ற நம்பிக்கையை விஜேவீர பலருக்கும் ஊட்டிவருகிறார். 1971 க்குப் பிறகு அவரது எதிர்ப்புரட்சியின் நேரடி விளைவாக ஊட்டம்பெற்ற இராணுவத்தையும் பொலிசையும் அவர் வசதியாகப் புறக்கணித்துவிடுகிறார். விஜேவீரவின் சாக்கடை அரசியல் தொழிலாளி வர்க்கத்திடம் எடுபடாததில் வியப்பில்லை. அவரது போலி இடதுசாரிக் கோஷங்கள்மீண்டும் மீண்டும் வாலிபர்களையே கவருவது குறிப்பிடத்தக்க விஷயம். இங்கேதான் ஜே.வி.பி. — யூ.என்.பி. உறவின் ஆபத்தான அம்சம் தங்கியுள்ளது.

1982 மேதினத்தில் பிரகடனம் செய்யப்பட்ட ஜே. வி.பி. வேலைத் திட்டங்களில் சில பகுதிகள்:—

500 ரூபா குறைந்தபட்ச வருமானம். 1000 ரூபாஅதிகபட்ச வருமானம். தனியார் மோட்டார் வாகனங்கள் பறிமுதல். ஆங்கில மொழியை ஆகற்றுவது (சகல உலக மொழிகளையும் இலங்கையுன் அரசகரும மொழிகளாக பிரகடனம் செய்வதாக விஜேவீராவால் 1980இல் கூறப்பட்டது.)

மேற்கூறிய சில்லறைத்தனமான வேலைத்திட்டங்கள் அரசியல் ஆழமுள்ள மக்களைக் கவர்வதற்காக முன்வைக்கப்பட்டனவா? இவற்றின் வெறுமை அம்பலமாக அதிகநாட்கள் எடுக்காது. ஆயினும் ஜே.வி.பி. தலைமை கொள்கைக்குப் பதிலாக கோஷங்களையே தன்வசம் கொண்டிருக்கிறது என்பது தெளிவு.

1978 ஊராட்சி மன்றத் தேர்தல்கட்கு முன் தமிழர்களது 'விடுதலைப் போராட்டத்தை' ஆதரிப்பதாக பிரகடனம் செய்த ஜே.வி.பி. தேர்தல் பிரசாரத்தின்போது உயிரைக் கொடுத்தும் பிரிவினையைத் தடுப்போம் என முழங்கியது. இப்போதுவடக்கில் வந்து தேசிய சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாயும் பிரிவினையை விரும்பவில்லை என்றும் பேசிவிட்டு அதையே சிறிது மாற்றி தெற்கில் பிரிவினையை எதிர்ப்பதாக பிரசாரம் செய்கிறார்கள்.

விஜேவீராவின் இன்றைய பாராளுமன்ற அரசியலுக்கும் அன்றைய 'புரட்சி' அரசியலுக்குமிடையில்வெளிப்படையாக இருந்த ஒற்றுமைகள் ஜனரஞ்சகமான கோஷங்களும், கவர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பிரசாரமுறையும் இடத்துக்கு ஏற்றவிதமான கோஷங்களுமே எனலாம். ஜே.வி.பி. தலைமையின் இரட்டைவேஷமும் பிற்போக்கு சக்திகளுடனான இரகசியக்கூட்டும் அன்றும் இன்றுமுள்ள பொது அம்சங்களுள் சிறிது மறைமுகமானவை. ஆட்சியைக் கைப்பற்றுவதே ஜே. வி. பி.யின் இலட்சியம். அதன்பின் என்ன என்ற தெளிவு அன்றும் இன்றும் ஜே.வி.பி. வாலிபர்கட்கு இருந்ததில்லை. 1971 கிளர்ச்சியின்பின் சில இடங்களில் வாலிபர்கள் தங்களையே அரசாங்க அதிபர்களாகவும், நீதிபதிகளாகவும் நியமித்துக்கொண்ட வேடிக்கை அவர்களது 'புரட்சிகர' அரசியல் ஞானத்தை பிரதிபலித்தது என்றால் இன்றைய நிலைமை அதிலும் அதிகம் வேறுபட்டதல்ல.

## 5. எதிர்கால அரசியல் பங்கு

திரிபுவாதிகளதும், சமசமாஜிகளதும் சந்தர்ப்பவாத அரசியலின் தோல்வி பொதுவாகவே இடதுசாரி இயக்கத்துக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. தொழிற் சங்க இயக்கத்தில் சீர்குலைவுக்கு இவர்களது பாராளுமன்ற அரசியல் ஒரு முக்கிய காரணி, 1956 இற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை மக்களுக்குச் சாதகமாக பயன்படுத்தாத சந்தர்ப்பவாதிகள் இடதுசாரி இயக்கத்துக்கு விளைவித்த கேடுகள் 1977 இல் யூ. என். பி.யின் மறு வருகைக்கும், இன்றைய அரசியல் குழப்ப நிலைக்கும் பங்களித்தன. இத்தகைய நிலையில் நடுத்தர வர்க்கத்தினதும், வேலையற்ற வாலிபர்களதும் விரக்தி அவர்களைப் போலி வாக்குறுதிகளை அள்ளி வீசிய யூ.என். பி.யை நோக்கியும் ஜே. வி. பி.யை நோக்கியும் உந்தியதில் வியப்பில்லை. ஜே.வி.பி. —யூ.என்.பி. உறவு தற்செயலான ஒன்றல்ல. ஜே.வி. பி. அன்று சிறிலங்கா சுதந்திரகட்சி அரசாங்கத்தை எதிர்த்து நடத்திய கிளர்ச்சியின் நன்மைகள் பின்பு யூ.என்.பி.க்கு வந்து சேர்ந்தன. ஜே. வி. பி. பலியிட்ட வாலிபர்கள்பற்றி யூ.என்.பி தன் பிரசாரக் கூட்டங்களில் முதலைக் கண்ணீர் வடித்தது. இன்றைய ஜே. வி. பி.க்கு யூ.என்.பி.யுடனான உறவு நேரடியான ஒன்று. ஆயினும் ஜே.வி.பி. சோவியத் தொடர்பு இந்த உறவுக்கு வேறு ஒரு பரிமாணத்தை அளித்துள்ளது. தற்போதைக்கு யூ.என்.பி. ஜே.வி.பி.யின் சோவியத் உறவுபற்றி அதிகம் கவலைப்படவில்லையென்றால் அதற்குக் காரணம் இல்லாமல்லில்லை.

இன்று ஜே.வி.பி.யின் முக்கிய பங்கு தேர்தலில் யூ.என்.பிக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதே. அதை ஜே.வி.பி நன்கு செய்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் ஜே. ஆர்.ரின் புதிய அடக்குமுறை ஆட்சி முதலில் சகல யூ.என். விரோதசக்திகளை ஒடுக்கவும் ஜே.வி.பி, தனக்கு தொந்தரவாக அமையும்பட்சத்தில் அதை நசுக்கவும் முனையும். யூ.என்.பி. தோல்வியடைந்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்கு விரோதமான கிளர்ச்சிக்கு ஜே. வி.பி. பயன்படும் அதன்மூலம நாட்டில் ராணுவ ஆட்சியை ஏற்படுத்தும் வாய்ப்பு இன்று 1971ல் இருந்ததிலும் அதிகமாக உள்ளது. அதன் விளைவு மறுபடி யூ.என்.பி சக்திகளே அதிகாரபீடம் ஏறுவதாக அமையும்,

ஜே,வி,பி,யின் கணிப்பு எவ்வாறாக இருந்தாலும் அவர்கள் யூ,என்,பியை காப்பாற்றவே இயங்குவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. அந்த வேலைக்கு வாலிபர்களை பலியிடநேருமா இல்லையா என்பதும் விஜேவீர தலைமைக்கு என்ன பதிலுதவி கிடைக்கும் என்பதும் காலம் பதில் கூற வேண்டிய விஷயங்கள்.

★ ★

அடுத்த இதழில்

**சுயநிர்ணய உரிமை என்றால் என்ன?**

(ஆய்வுக் கட்டுரை)

இடம்பெறும்

## கோட்டையில் கும்மாளம் போடும் கூட்டணிக்கு

# தேர்தலில் அக்கறை இல்லையாம்!

ஜனாதிபதியின் அனுசரணையுடன் தேர்தலை பகிஷ்கரிக்காமலும், சில இக்கட்டான சிக்கல்களிலிருந்து தற்காலிகமாக தப்பிக்கொள்வதற்காகத் தேர்தல் காலத்தில் இங்கு இல்லாமலும் இரண்டுங் கெட்டான் நிலையில் ஜனாதிபதி தேர்தலில் ''தமிழ் மக்களுக்கு அக்கறை இல்லை'' என்று வாய் கூசாமல் கூறியுள்ளது அமிர் கும்பல். அடுத்த பொதுத் தேர்தல்வரை கூட்டணித் தலைமைக்கு அரசியலில் அக்கறை இல்லாமல் இருக்கலாம்; தம்பதி சமேதர்களாக வெளிநாடுகளில் சாமான்கள் வாங்கித் திரியலாம். ஆனால் தமிழ் மக்கள் இந்த நாட்டில்தானே இருக்கவேண்டும்! நன்மை தீமைகளை அனுபவிக்க வேண்டும். இனி வரும் ஏழேழு தலைமுறைக்கும் போதுமான அளவுக்கு இன்றைய அரசாங்கம் நமது நாட்டை அந்நிய கம்பனிகளுக்கும் வங்கிகளுக்கும் அடகு வைத்துள்ளது. ஆயிரத்தைந்நூறு கோடி ரூபா கடன் பெற்றுள்ளது மட்டுமன்றி அதனை எதிர்காலத்தில் திருப்பிக் கொடுப்பதற்காகப் பல தலைமுறைகளுக்கு கடன்பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடு இல்லாமல் மக்களின் மீதே இந்த இராட்சத சுமை ஏற்றப்பட்டுள்ளது. இதில் நமக்குப் பங்கில்லை என்று கூட்டணி பகிரங்கமாக கூற முடியுமா? அவர்கள் பங்குபற்றும் பாராளுமன்றம் மூலமாகத்தானே யாவும் நடக்கின்றன. அவர்கள் ஓடித்திரியும் ஜீப் வண்டிகளும், அவர்கள் பயன்படுத்தும் எரிபொருளும், டெலிபோன் வசதிகளும் அந்நிய கடன் மூலம்தானே வருகிறது. சுகத்துக்கு ஒரு நீதி; கடமைக்கு வேறு நீதியா? கோட்டையில் புதிய பாராளுமன்றம் திறந்தபொழுது அமிர் கும்பல் விழுந்தடித்து பங்குபற்றவில்லையா? கடிதம் எழுதும் காகிதங்களில் எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்றம் ஜெயவர்த்தனபுரம் என்று கோட்டை எழுத்துக்களில் அச்சடித்தல் பயன்படுத்தவில்லையா? பாராளுமன்ற பரிமாற்ற பிரயாணங்களை மேற்கொண்டு உலகம் சுற்றவில்லையா? குடும்ப உறுப்பினர்களைப் போய்ப் பார்த்து வரவில்லையா? எல்லாம் சலுகைகளைப் பொறுத்தவரையில்— தங்களுக்கு இலாபம் என்றால் சரி. மக்கள் இருட்டில் இருப்பதா? தமிழ்மக்கள் பங்குபற்றுவதால் யாருக்கு நஷ்டம்? கூட்டணி ஆதரவாளர் குறிப்பாக கொழும்பு பணமுதலைகள் யூ.என்.பி.க்கு வாக்களிப்பார்கள். இங்கு விவசாயிகளும், புத்திஜீவிகளும், தாழ்த்தப்பட்ட மக்களும், பிறரும் யூ.என்.பி.க்கு எதிரான அபேட்சகர்களுக்குப் போடாமல் செய்வதே 'அக்கறையில்லை' என்ற சுலோகத்தின் அடிப்படையாகும்.

கூட்டணியும் அதன் கூறுகளான தமிழ்க் காங்கிரசும், முதலாளி தொண்டமானின் காங்கிரசும் கடந்த காலத்தில் செய்தது என்ன? தாம் நினைத்தநேரத்தில் வெவ்வேறு முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு முண்டு கொடுக்கவில்லையா? மாவிட்டபுரம் கோயில் விவகார வைதிகக் காப்பாளர் சுந்தரலிங்கமும் தமிழ்க்காங்கிரசும் சுதந்திரத்திற்குப் பின் தொடங்கி பண்டாரநாயக்க அரசாங்கம் அமைத்த நாள் வரை யூ. என். பி. ஆட்சியில் ஒட்டியிருந்தவர்கள். டட்லியின் அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி முழுமூச்சாக 65—69 காலப்பகுதியில் பங்குபற்றவில்லையா? சகலவிதமான முற்போக்கு நடவடிக்கைகளையும் எதிர்த்து தமிழரின் பேரில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியை ஆதரிக்காமல் விடவில்லையா? கடந்த மாதம் வரை பேச்சு வார்த்தைகள் என்று அமிர் கும்பல் ஜனாதிபதி மாளிகையில் அடங்கிப் போய்விடவில்லையா? பாசிஸ அடக்குமுறைகள் அவிழ்த்து விடப்பட்ட அண்மைக் காலத்தில் மூச்சுவிடாமல் சாத்வீகப் பிரச்சாரம் செய்யவில்லையா? அடிப்படை இதுதான். யூ. என். பி. அதிகாரத்தில் இருக்கும் வேளைகளில் கூட்டணிக்கு குறிப்பாக அமிர் கும்பலுக்கு வாய் அடைத்துப் போவதுண்டு. வர்க்க சமரசமே அதற்குக் காரணம். அன்று தொட்டு ஏகாதிபத்தியத்துக்கும் உள்ளூர் தரகுமுதலாளித்துவத்துக்கும் தொண்டு புரிவதும், இடதுசாரிகளை ஆக்குரோசத்துடன் எதிர்ப்பதுமே அமிரின் இலட்சியமாக இருந்து வந்திருக்கிறது. அதன மற்றொரு வெளிப்பாடே தேர்தலில் ''ஒதுங்கி'' இருப்பது என்ற பாவனை. நாட்டுமக்கள் அடிமைப்பட்டு நலிவுற்றால் கூட்டணிக்கு என்ன நிலை. பென்ஷன் வரும்; பிள்ளைகள் வெளிநாடுகளில் படிக்கிறார்கள்; வேலைசெய்கிறார்கள்; இங்கு சகல சலுகைகளும் வசதிகளும் உண்டு. அரசியல் இலட்சியத்தொண்டாக இல்லாமல், பதவியாக மாறிய பின் நல்லது கெட்டது என்ற பேச்சு யாருக்கு வேண்டும்? மக்களை ஏமாற்றக்கூடியவரை ஏமாற்றவே பார்ப்பார்கள்.

## இன வெறியை எதிர்ப்போர் சாதி வெறியை எதிர்க்க அஞ்சுகின்றனர்!

### —புத்தூரில் தோழர் செந்தில் பேச்சு

தெற்கிலிருந்து கிளப்பிவிடப்படும் இனவாதத்தையும், இனவெறியையும் எதிர்ப்பதாகக் கூறிவரும் பாராளுமன்றத் தமிழ்க் கட்சிகள் வடக்கில் தமது கண்முன்னே கிளப்பிவிடப்படும் தீண்டாமையையும் சாதிவெறியையும் எதிர்க்க அஞ்சுகின்றார்கள். இது எதற்காக?

இவ்வாறு அண்மையில புத்தூரில் தாழ்த்தப்பட்ட மக்களின் இன்றைய நிலையும் எதிர்காலமும் என்னும் தலைப்பில் நடைபெற்ற பகிரங்கக் கருத்தரங்கில உரையாற்றிய தோழர் செந்திவேல் குறிப்பிட்டார்.

தோழர் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் தோழர் செந்தில் தொடர்ந்து பேசுகையல் தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை தமிழ்மக்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினராகும். இத்தொகையான மக்களையும் அவர்களது அடிப்படையான உரிமைகளையும் மறுத்துவிட்டு இன விடுதலைக்கு போராடுகின்றோம் என்று சிலர் கூறுவது சுத்த ஏமாற்றாகும். இத்தகையவர்களை நம்பி தாழ்த்தப்பட்ட மக்கள் எந்தக் காலத்திலும் விமோசனம் பெறமுடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது உரிமைகளையும் சமத்துவத்தையும் பெற்றுக்கொள்ளத் தமது சொந்தப் பலத்தில் தங்கிநின்று மக்கள் போராட்ட இயக்கங்களை முன்னெடுப்பதன்மூலமே தாழ்த்தப்பட்ட மக்கள் விமோசனப் பாதையில் செல்ல முடியும். இத்தகைய போராட்டம் முழுதேச விடுதலையுடன் இணைக்கப்பட்ட அரசியல் போராட்டங்களில் ஒன்றாக இருக்கவேண்டுமேயன்றி குறுகிய சாதிவெறிப் போராட்டமாக அமையகூடாது. தாழ்த்தப்பட்ட மக்களின் ஏகபெரும்பான்மையினர் உழைக்கும் வர்க்கத்தினரேயாவர். அவர்கள் நாட்டின் ஏனைய உழைக்கும் மக்களின் அரசியல் போராட்டங்களுடன் தம்மை இணைத்து இயக்கங்களை முன்னெடுப்பதாலேயே முன்னேற முடியும்.

மேற்படி கருத்தரங்கில் தோழர் வை. வன்னியசிங்கம், சோ. தேவராஜா என். இரவீந்திரன், எஸ். செல்வராசா ஆகியோர் உரையாற்றினர்.

1-ம் பக்கத் தொடர்

## பொது எதிரியை......

திரக்கட்சிவேட்பாளரை ஆதரித்து யூ.என்.பி.யைத் தோற்கடிக்க உதவ வேண்டும்

எமது கட்சியைபொறுத்தவரை முதலாளித்துவப் பாராளுமன்றம் பற்றியும் அதை நம்பிவாழும் பாராளுமன்ற கட்சிகள் பற்றியும். எமக்கு ஒரு தெளிவான கொள்கை உண்டு. குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிபற்றி எம்மிடம் தெளிவான கொள்கை உண்டு. அதுவும் முதலாளித்துவக் கட்சிதான் என்பதும், பாராளுமன்ற எல்லைகளை தாண்ட அஞ்சும் ஒருகட்சி என்பதும், எமக்கு தெரியும். ஆனால் யூ.என்.பி.யும் — ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒரேவகையான முதலாளித்துவக் கட்சிகள் என்ற ரொட்சிச நிலைப்பாட்டை நாம் ஏற்க முடியாது. முன்னையது ஏகாதிபத்திய சார்பு பெருமுதலாளித்துவ கட்சி என்பதும் பின்னையது தேசிய முதலாளித்துவக் கட்சி என்பதும்— இதற்கு ஓரளவு தேசிய அபிலாஷைகள் உண்டு என்பதும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியதுமாகும்.

இந்நிலையில் முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பின்மூலம் உழைக்கும் மக்கள் விமோசனத்தைப் பெற முடியாது என்ற உண்மைக்கும், பொது எதிரியான யூ. என். பி. யை அதிகாரத்தில் இருந்து அகற்றுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களிப்பது என்பதற்கும் இடையில் குழப்பத்தை ஏற்படுத்துவது தவறாகும்.

இன்று இலங்கை மக்களின் முன்னால் உள்ள பிரச்சினை சோஷலிசம் அல்ல. இன்றைய பிரச்சினை ஜனநாயகம் சார்ந்த பிரச்சினையேயாகும். இதை மாக்சிசம், லெனினிசம் மாசேதுங் சிந்தனையின் ஒளி பாச்சலின் மூலம் இலங்கையின் யதார்த்த நிலைமைகளிலிருந்து பெற வேண்டிய முடிவே அன்றி வெறுமையடைந்த கோஷங்களிலிருந்து உண்மை நிலைமைகளைப்பெற முடியாது என்பதே நமது நிலையாகும்.

5ம்பக்கத் தொடர்

## தமிழர் தலைமைகளும்...

யாழ்ப்பாணத்தில் கத்திக்குத்து என்றாலும், களவு என்றாலும் பயங்கரவாதிகள் செய்தது என்று சோடித்து செய்தி வெளியிடுவதில் சில சிங்களப் பத்திரிகையாளர்கள் நிபுணர்கள். ஆனால் பொலிஸ் இராணுவ அட்டூழியங்களைப் பற்றி இவர்கள் மூச்சு விடுவது கூட இல்லை. இதேபோன்று சிங்கள மக்கள் மத்தியில் தமிழ்மக்களுக்கு ஆதரவான நியாயமான நிலைப்பாட்டை உடையவர்கள் எடுத்துச்சொல்லும் கருத்துக்களைவிட சிங்கள வகுப்புவாதிகள் பேசும் பேச்சுக்களையே தமிழ்ப்பத்திரிகைகள் முக்கியமானவையாகக் கருதுகின்றன. இதில் வேடிக்கை என்னவெனில் இரண்டு விதமான செய்தித்தாள்களும் ஒரே நிறுவனத்தாலேயே வெளியிடப்படுவதாகும்.

தமிழ்மக்களின் கோரிக்கைகளை சிங்கள மக்கள் சரியாக விளங்கிக்கொள்ள முடியாமைக்கு சிங்கள இனவாத அரசியல்வாதிகள் மட்டுமன்றிப் பத்திரிகைகளும் ஒரு காரணம். அன்று சமஷ்டிக் கோரிக்கையை பிரிவினைவாதம் என்று சிங்கள மக்களை நினைக்க வைத்ததில் பத்திரிகைகளின்பங்கு சிறியதல்ல. அதே சமயம் சிங்கள மக்களுக்கு தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை விளக்குவதில் தமிழ்த்தலைவர்கள் அதிகம் சிரமப்பட்டதும் இல்லை. தமிழர் பிரச்சினைகளை அனுதாபத்துடன் அணுகிய சிங்களத் தலைவர்களைத் தமிழர் அதிகம் நெருங்காமல் பாதுகாப்பதில் தமிழரசுக்கட்சி விசேட கவனம் எடுத்துக்கொண்டது, எல்லா சிங்களவர்களும் ஒரேமாதிரியானவர்கள்' என்றவிதமான கருத்தை அவர்கள் கவனத்துடன் பராமரித்துப் பேணினார்கள். தமிழர்கட்கு தமிழரசுச் கட்சியாகவும், சிங்களவர்கட்கு (Fedaral) பெடரல் கட்சியாகவும் இரட்டை வேஷம் போட்ட ஒரு கட்சியின் தலைமையிடம் அதிகம் எதிர்பார்த்திருக்க முடியாதுதான்.

ஆனாலும் இன்றுள்ள நெருக்கடியான அரசியல் சூழலில் தமிழ்ப்பிரதேசங்களில் நடக்கும் அட்டூழியங்களையும் அரசாங்கத்தின் இனவாத போக்கையும் சிங்கள மக்கள் மத்தியில் விளக்குவதன்மூலமே தமிழ்மக்களது நியாயமான கோரிக்கைகளை விஷமிகள் திசைதிருப்பாது ஓரளவேனும் தடுக்கமுடியும், வெறுமனே வடக்கிலும், தமிழ்நாட்டிலும். லண்டனிலும், நியூயோக்கிலும்போடும் கூச்சல்களைவிட பரந்துபட்ட சிங்கள மக்களது நியாய உணர்வுகளைத் தொட எடுக்கும் முயற்சிகள் பலவகையிலும் பன்மடங்கு பயனுள்ளவை.

★

## எங்கள் திராவிடப் பொன்னாடே

மூன்று மாதங்கள் முன்னர் ஊத்தங்கரை (வடஆற்காடு) என்ற தமிழ் நாட்டுக் கிராமத்தில் ஒரு வாலிபரை காரணமின்றிப் பொலிசார் வதைத்து அவர் இறந்துவிட்டதால் அதுபற்றி நியாயம் கேட்ட ஜனங்கள்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து சிலர் இறந்தனர். இறந்தவர் தொகை நான்கு என்று பொலிசாரும் இருபதுக்கும் அதிகம் என ஊராரும் கூறுகின்றனர். வடஆற்காட்டில் 'நக்சலைட்' இயக்கங்களைச் சமாளிக்க ஆயிரக்கணக்கில் மேலதிகமான பொலிசார் நியமிக்கப்பட்டுள்ளனர். யாரையும் எவரையும் 'நக்சலைட்' என்ற பேரில் கைது செய்யவும், கடத்திச் செல்லவும் முடிவதனால் காணாமற் போனவர்களின் தொகையை உறுதிப்படுத்துவது மிகவும் சிரமமாக இருக்கிறது. சம்பவம் நடந்து பல வாரங்களாகியும் கிராம மக்கள் அதுபற்றிப் பேசப்பயப்படும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இத்தகைய பொலிஸ் வன்முறை கடந்த சில ஆண்டுகளாகப் பரவி வருகிறது. திராவிடர் இயக்கங்கள் ஆட்சியில் திராவிடருக்கு இவ்வாறு வழங்கப்படும் நீதி பற்றி வியப்பு இல்லை. இத்தகைய மகான்கள்தான் நம் பிரச்சனைகட்காக போராட்டம் நடத்துவதாக நம்புவதற்கு இங்கே ஆட்கள் இருக்கிறார்களே — அதுதான் ஆச்சரியம்!

★

## டெலிவிசன் நாடகம்

விஜேவீரவின் முதலாவது டெலிவிசன் உரையில் அவர்தன் கட்சியின் பல்வேறு திட்டங்களையும் விளக்கினார். அவரது பேச்சின்போது வடக்கில் உயிரிழக்கும் அப்பாவிப் பொலிசாரதும, இராணுவத்தினரது அனுதரவான குடும்பங்களைப்பற்றி மிகவும் சரிசனை தெரிவித்ததோடு தான் ஜனாதிபதியானால் அவர்கட்கு அளிக்கவுள்ள பாதுகாப்புப் பற்றியும் பேசினார். எவ்விதம் பிரச்சனையை தீர்ப்பார் என மட்டும் பேசவில்லை. அதே சமயம் தன் ஆங்கிலபேச்சில் இந்த விஷயம்பற்றி அவர் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. தமிழில் பேசநேர்ந்தால் கட்டாயம் தமிழ் வாலிபர்கட்காக கண்ணீர் வழங்காமலா விடப்போகிறார்? கெனமன் கும்பலின் கபடநாடகங்கள் ஒரு சில மாதங்களுக்காகவாவது எடுபடுகின்றன. விஜேவீரவின் குட்டும்கூற்று முடியுமுன்னேயே வெளிச்சமாகிவிடும்போல் தெரிகிறது.

★

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். வெளியீடு: சி. நவரத்தினம் 15/1 மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம்.